கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

REGISTRAR OF BOOKS
2 1 MAR 352



-4

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 8900 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராக இருக்கிறார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் இன்னும் இலங்கை, மலேயா, முதலிய வெளிநாடுகளிலிருந்துங்கூட பல அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுது கூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவு தான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனமாக எனமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஆனால் தலைக்கு மூன்று கூபன் விதம் தான் அனுப்பவேண்டும். அவ்வப்போது கண்ணனில் போட்டிகள் வெளியாகின்றன. இவற்றில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

பம்பாயிலிருந்து பாட்ஜுகள் வந்துவிட்டன. இதுவரை பாட்ஜு பெறாத புது அங்கத்தினர்களுக்கு இப்பொழுது அனுப்பப்பட்டு வருகிறது.

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக என்ற திட்டமிட்டு, சுவாரஸ்யமான நல்ல கதைகளாகப் பொறுக்கிச் சில புத்தகங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். குழந்தைகள் மனத்தைக் கவரும் கதைகள்; படங்கள்.

'ராமசர்மா' எழுதியவை

ஜாவும் குருவியும்	அணு 8
கழுதும் கிளியும்	அணு 8
தவளையும் காளையும்	அணு 8

'சூடாமணி' எழுதியவை

கோழி விதைத்த நெல்	அணு 3
தங்கத்தின் பந்து	அணு 3
என் பேர் என்ன?	அணு 3

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு. கமிஷன் கழித்து மணியார்டராகவோ ஸ்டாம்புகளாகவோ தொகையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏஜெண்டுகளுக்கு 25 % கமிஷன் உண்டு. முன் பணம் அனுப்பவேண்டும்.

விவரங்களுக்கு:

கண்ணன்

தபால் பெட்டி: 604, சென்னை, 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 MAR 1952

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 1

குழந்தைகளே! .. .. பக்கம்	2
ஜப்பு - 'ஆர்வி'	3
குளிகைத் தீவு - சித்திரக் கதை ..	9
பொம்மை உடைந்தது - பூவண்ணன்	13
சித்திரத்தில் க்விஸ்	17
எலிகள் - தமிழகன்	18
ரன்னர் விளையாட்டு - ராகவேந்திரன்	20
பேனாத் திருடன் - என். எஸ். ஸ்ரீ. ..	21
பைனாகுலர் - 'ராஜன்'	25
தந்தையும் மகனும் - குகப்ரியை ..	28
இந்த விடுமுறை - ரகுநாதன் ..	32
பரீட்சை - எஸ். மீனாட்சி	34
கண்ணன் கழக அங்கத்தினர்கள் ..	35
சின்னஞ் சிறு கதைகள் - 'ராமசர்மா'	37
பொழுது போக்கு - திருநாவுக்கரசு ..	39
பாலுவின் பரிசு - வி. கே. சாந்தா ..	40
சாமர்த்தியமுள்ள ஆட்டுக்குட்டி ..	44
டெலிபோன் - புரொபஸர்	45
விதியின் விளையாட்டு - அன்னபூரணி	49
கேட்டீர்களா!	54
கண்ணன் தபால்	55

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

...-900 0...

உங்கள் யாவருக்கும் என்னுடைய புது வருஷ வாழ்த்துக்கள்.

கண்ணனுக்கு இந்த இதழிலிருந்து மூன்றாவது ஆண்டு ஆரம்பிக்கிறது. உங்கள் மனத்திலே இந்த இரண்டு வருஷங்களில் கண்ணன் அழியாத இடம் பெற்றுவிட்டான். இந்தப் புது ஆண்டில் கண்ணனில் பல புதிய பகுதிகளை நீங்கள் காண்பீர்கள். அதற்கு ஒரு மாதிரியாக அமைந்திருக்கிறது இந்த ஜனவரி இதழ்.

'ஜம்பு' என்ற அற்புதமான தொடர்கதை இந்த இதழில் ஆரம்பமாகியிருக்கிறது. அடுத்தபடி என்ன நடக்கப்போகிறது என்று நீங்கள் திகைக்கும்படி பல ஆச்சரியமான சம்பவங்கள் நிறைந்தது இந்தக் கதை. படித்துவிட்டு நீங்களே எழுதப் போகிறீர்கள். நான் அதிகம் சொல்வானேன்!

அடுத்தபடியாக, இந்த இதழில் வந்துள்ள குளிகைத் தீவு என்ற 4 பக்கமுள்ள சித்திரக் கதையை இன்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்; படித்துக்கொண்டிருக்கலாம். கதை அத்தனை சுவாரஸ்யமாகவும் படங்கள் அவ்வளவு அற்புதமாகவும் அமைந்திருக்கின்றன. அடுத்த இதழில் இன்னும் பிரமிக்கத்தக்க விதத்தில் கதையும் படங்களும் இருக்கும்.

மூன்றாவது புதிய அம்சம் புரொபஸர் விஞ்ஞானத்தின் விளக்கம். இவர் ஒரு பிரபல ஆசிரியர். விஞ்ஞானப் புரொபஸர். குழந்தைகளுக்குப் பல பாடப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார். முதல் முதலில் அவர் டெலிபோனைப் பற்றியும் அதைக் கண்டுபிடித்தவரைப் பற்றியும் படங்களுடன் மனசில் பதியக் கூடியவாறு, நேரில் பேசுவது போலவே விளக்குகிறார். இது எப்படி இருக்கிறது என்றும் எழுதுங்கள்.

இன்னும் பக்கத்துக்குப் பக்கம் பற்பல மாறுதல்களை உள்ளே நீங்கள் பார்ப்பீர்கள். கிரிக்கெட்டுக்குப் பதிலாக ஆரம்பமாகப் போவது நீச்சல் பயிற்சி. அது அடுத்த இதழில் தொடங்குகிறது. 'இயற்கை விநோதங்கள்' என்ற வரிசையும் அடுத்த இதழில் ஆரம்பமாகிறது. கண்ணன் தபால் பகுதிக்கு நீங்கள் எல்லாருமே எழுதலாம். உல்லாசப் பிரயாணத்தைப் பற்றியும் உங்களுக்குத் தோன்றும் சுவாரஸ்யமான விஷயங்கள் பற்றியும் எழுதலாம். விகடத் துணுக்குகளும் எழுதியனுப்பலாம். தேர்ந்தெடுத்த விகடத் துணுக்குகளில் சிறந்தவற்றிற்கு ரூ. 3/- பரிசு கொடுக்கப்படும். துணுக்கு இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் வந்ததாக இருக்கக்கூடாது.

புது வருஷத்தில் கண்ணன் பலவிதத்திலும் சிறப்பாக இருக்கும். தொடர்கதைகள் விட்டுப் போகாமலிருக்க வேண்டுமானால் ஒரு வழிதான் உண்டு. உங்கள் சந்தாவை உடனே அனுப்பிவிட வேண்டும்.

கண்ணன் பாட்ஜுகள் இப்போது அனுப்பப்பட்டு வருகின்றன. அங்கத்தினர்களுக்கு ஒரு புதிய போட்டி அடுத்த இதழில் வெளியாகும். ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

ஜம்பு

ஆர்வி

ஜம்புவுக்குச் சரியாக வயது பன்னிரண்டுதான் ஆயிற்று. ஹைஸ்கூலில் மூன்றாவது பாரம் படித்துக்கொண்டிருந்தான்.

அரை வருஷப் பரீட்சை முடிந்தது. "கேள்விகள் எல்லாம் எப்படிடா?" என்று அவன் அப்பா கேட்டார். ஜம்பு முகத்தை வேறு பக்கம் பார்த்துக்கொண்டு, "எப்போதும் போலத்தான், அப்பா!" என்று முணுமுணுத்தான்.

"எல்லாம் எழுதியிருக்கியா?"

"எல்லாந்தான் எழுதியிருக்கேன்!"

"நீ எழுதியிருக்கிறது இருக்கட்டும்; எல்லாத்தையும் சரியாக எழுதியிருக்கியா?"

ஜம்பு அப்பாவின் காதில் விழாதபடி ஏதோ முணுமுணுத்தான்.

"என்னடா?' என்று அதட்டிக் கேட்டார் அப்பா.

"சரியாக எழுதினால் மட்டும் என்ன! சரியாக மார்க்குக் கொடுத்தால்தானே?" என்றான் ஜம்பு. அந்த வார்த்தைகளும் அப்பாவின் காதில் சரியாக விழவில்லை.

அவனுடைய அப்பாவிடம் ஜம்புவுக்குப் பயம். எதிரில் நின்றே பேசமாட்டான். அப்பா அவனிடம் மேலும் எதுவும் கேட்காமல், "இதோ பாரடா! நீ ஒழுங்காகப் படிக்கவில்லையோ மறுபடியும் இந்த வகுப்பிலேயே கிடக்கவேண்டியதுதான். படிப்பு வரவில்லை என்று நிறுத்திவிட மாட்டேன். உன்னை விடச் சின்னப் பையன்கள் உன்னோடு வந்து உட்கார்ந்து உன்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். உன் தம்பியே உன் வகுப்புக்கு வந்துவிடுவான். துஷ்டத்தனத்தை விட்டுவிட்டு அக்கறையாகப் படிக்காவிட்டால் அவமானப்பட வேண்டியதுதான்!" என்றார்.

ஜம்பு பயத்துடன் தலையை மிதப்பாக ஆட்டிவிட்டு உள்ளே போனான். "அப்பா சொல்வதைக் காதில் சரியாக வாங்கிக் கொள்ளாமல் வருகிறாயே!" என்றாள் அம்மா.

"அதெல்லாம் அப்பா சொல்லாவிட்டாலும் எனக்குத் தெரியும். படிக்காதவன் பாஸ் பண்ணமாட்டான்! இது அப்பாவுக்கு என்ன, பாப்பாவுக்குக்கூடத் தெரியுமே!" என்று தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டே தன் அறைக்குள் போனான்.

ஆமாம்; அவனுக்கு என்று ஓர் அறை வாசலை ஒட்டியிருந்தது. அதிலே ஒரு சின்ன மேஜை போட்டிருந்தான். அதற்கு எதிரிலிருந்த ஒரு கைவைத்த நாற்காலியில்தான் அவன் உட்காருவான். அவன் உட்காரும் இடத்துக்கு நேர் உயரத்தில் ஒரு பெரிய கண்ணாடியிருந்தது. தலை நிமிர்ந்தால் அவன் உருவம் அதில் தெரியும். மூலையில் ஒரு பெட்டி. கொஞ்சம் உயரத்தில் சுவரிலேயே ஓர் அலமாரி பதித்திருந்தது. அறையினுள் எந்த இடத்தில் நிமிர்ந்து பார்த்தாலும் அட்டையில்

ஒட்டிய போட்டோக்கள் தொங்குவதைப் பார்க்கலாம். ஹஸாரே, மார்ச்சென்ட், உம்ரிகர், பாட்கர், அமர்நாத் முதலிய கிரிக்கெட் ஆட்டக்காரர்களுடைய படங்களைப் பத்திரிகைகளிலிருந்து வெட்டி, ஒட்டி வைத்திருக்கிறான். ஜம்புவுக்குச் சினிமா என்றால் பைத்தியம். சினிமா நக்ஷத்திரங்கள் போட்டோக்களைக்கூட மாட்டி வைக்க வேண்டும் என்று ஆசை அவனுக்கு. ஆனால் அப்பா கண்ணில் பட்டுவிட்டால் முதுகுத் தோல் உரிந்துவிடும் என்று அவனுக்குப் பயம். பெட்டியைத் திறந்தால் மேலே பூகோளப் புஸ்தகங்கள், அட்லாஸ் இரண்டும் மறைத்துக் கொண்டிருக்கும். அடியில் ஓரணா, அரையணாக் கதைப் புஸ்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் தாறுமாருகக் கிடக்கும். அதை இன்னும் கொஞ்சம் புரட்டினால் ஒரு பூப்பந்து, பிடி உடைந்த கத்தி, புழுக்கை புழுக்கையாகக் கலர்ப் பென்சில்கள், ஓட்டை உடைசல்கள் இன்னும் என்ன வெல்லாமோ கிடக்கும். அதற்கும் அடியில் கார்பன் பேப்பர் வைக்கும் பெட்டி ஒன்று இருக்கிறது. அதற்குள் ஒரே சினிமா நடிகர்களின் படங்கள். தமிழ், ஹிந்தி, ஆங்கிலப் படங்களில் நடிக்கும் புகழ்பெற்ற அபிமான நடிகர்கள். வயசு, வருமானம், கார் நம்பர், இந்த வருஷத்தில் யார் அகாடமிப் பரிசு வாங்கியவர் என்றெல்லாம் அந்தப் படங்களின் பின்னால் விவரங்கள் குறித்து வைத்திருக்கிருன். அந்த அட்டைக்குள் இன்னும் சில போட்டோப் படங்கள் இருக்கும். அவையெல்லாம் ரூபாய்க்கு எட்டுப் படங்கள் என்று போட்டிருக்கும் ஸ்டுடியோவில் எடுத்தவை. எல்லாவற்றிலும் காணப்படும் ஜம்புவின் முகம் பற்பல கோணங்களில் நம்மைப் பார்த்துப் புன்முறுவல் செய்யும்; 'ஹோ ஹோ!' என்று வாயைப் பிளந்து கொண்டு சிரிக்கும்; 'ஊ ஊ' என்று அழும்; கெஞ்சும்; 'உம்' என்று அதட்டும்; மிரட்டும்; அதிகாரம் செய்யும். ஒன்றில் ஸ்கவுட் உடுப்புடன் இருப்பான். இன்னென்றில் புஷ்கோட் பாண்டுடன் இருப்பான். வேறு ஒன்றில் 'மப்டி'யில் இருப்பான்; சூட் அணிந்து டையும் கட்டியிருப்பான். கையில் கிரிக்கெட் மட்டையுடன் நிற்பான். இவ்விதம் அவ்வப்போது போட்டோக்கள் எடுத்துச் சேர்த்திருக்கிறான். பெட்டியில் நூல் போட்ட அறுபது பக்க நோட்டுப் புஸ்தகங்கள் அக்கக்காகக் கிடக்கும். ஒரு பக்கத்தில், 'ஜமீன்தார் மாளிகையின் மர்மம்' என்று தலைப்பில் தப்பும் தவறுமாக நாலைந்து வரிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. மேலே மர்மம் விளங்கவில்லை; கதை ஆரம்பத்திலேயே நின்றுவிட்டது. இன்னென்று, 'தப்பறியும் கோபாலனின் அற்புதச் செயல்கள்' என்ற மகுடத்தில் மயிர்க்கூச்செறியும் அரைகுறைக் கதை. 'டுமீல், டுமீல்' என்று துப்பாக்கியின் வேட்டுச் சத்தத்துடன் ஒரு கதை ஆரம்பமாயிருக்கிறது. அதற்கு இன்னும் தலைப்புக் கொடுக்கவில்லை. 'டகடக டக்டச், டட்டட் டடடட' என்று மோகனைச் சுமந்துகொண்டு ஒரு குதிரை ஓடிக்கொண்டேயிருக்கிறது; நிற்கவேயில்லை. எப்போது நிற்கப்போகிறதோ?......

அப்புறம் அலமாரி! இதனைச் சொல்லவே வேண்டியதில்லை. உடைகள், மட்டைகள் எல்லாவற்றையும் அங்கே பார்க்க

லாம். நிஜத் துப்பாக்கி போலவே அவனுடைய அறைக்குள் நாம் பார்க்
ஒரு அமெரிக்கன் பிஸ்டல்கூட கும் சாமான்களுக்கு ஒரு கணக்கு
அங்கே இருக்கிறது. மொத்தத்தில் எடுக்க முடியாது. அவனுடைய

அறைக்குள் அநேகமாக யார் வந்தாலும் அவன் பொறுத்துக்கொள்வான். ஆனால் அவன் தம்பி குமார் மட்டும் உள்ளே வருவதை அவன் பொறுக்க மாட்டான். அவன் தம்பிக்கும் அவனுக்கும் ஆகவே ஆகாது.

இன்று தன்னறைக்குள் நுழைந்த ஜம்பு, கண்ணாடி முன் நின்று தலையைப் படியச் சீவிக் கொண்டான். இரவில் படுக்கும் போதுகூட அவன் தலையைச் சீவிக் கொள்வது வழக்கம். டிராயரைக் குடைந்து அங்கே எப்போதெல்லாமோ போட்டிருந்த சில்லறைகளில் கொஞ்சம் பொறுக்கிக் கொண்டான். சின்ன பிளாஸ்டிக் மணி பர்ஸுக்குள் அந்தச் சில்லறைகளைப் போட்டுக்கொண்டான். கால் சட்டைப் பைக்குள் அந்த அமெரிக்கன் பிஸ்டலை எடுத்து வைத்துக் கொண்டான். தெருவைப் பார்த்த ஜன்னலருகில் நின்று யாரையோ எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அதற்குள் இன்னொரு சந்தேகம் வந்துவிட்டது. உடனே டிராயரைத் திறந்தான். கோடியில் மறைவாகப் பதுக்கி வைத்திருந்த ஒரு கறுப்பு டயரியை வெளியில் எடுத்தான். அதிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை வெளியே எடுத்துப் பிரித்துப் பார்த்தான். "சரிதான்; ஏழு மணிக்கு நான் அங்கே இருக்க வேண்டும்" என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டு காகிதத்தை மடித்துச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டான்.

தூரத்தில் ஒன்று மாற்றி ஒன்றாக இரண்டு விசில் சத்தம் கேட்டது. எங்கே போவதானாலும் வீட்டில் சொல்லிக்கொண்டு போகவேண்டும் என்று உத்தரவு. அதற்காக அம்மாவிடம் போய், "அம்மா, நான் ஒரு பையன் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்" என்றான்.

"எனக்குத் தெரியாது. நீ அப்பாவிடம் கேட்டுக்கொண்டு போ. உன்னை எங்கேயும் அனுப்பக் கூடாது என்று அப்பா கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார்!" என்றாள் அம்மா.

ஜம்புவுக்கு இந்த உத்தரவு என் என்பது தெரியாதா? கிறிஸ்துமஸ் அன்றுதான் 'நீல மாளிகை' என்ற புதுப் படம் ரிலீஸாகிறது. முதல் காட்சிக்கு முதல் டிக்கட் வாங்கா விட்டால் ஜம்புவின் தலை வெடித்து விடும். நண்பர்களிடம் அவனுக்குள்ள பெருமை, கௌரவம் எல்லாமே அதனால்தான் பாதி. என்னதான் கூட்டமாக இருக்கட்டுமே ஜம்புவிடம் ஒன்றும் பாச்சா பலிக்காது. அவன் எப்படியோ சமாளித்து விடுவான். இதெல்லாம் இப்போது அவன் அப்பாவுக்குத் தெரிந்து விட்டது. குமார்தான் இதற்குக் காரணம். தம்பியை அப்படியே நொறுக்கிவிட மாட்டோமா என்று ஜம்புவுக்கு ஆத்திரமாய் வந்தது. ஆனால் அவனைத் தொட்டால் அப்பா அவன் கையை வாங்கி விடுவார். குமாரிடம் மட்டும் அவருக்கு அலாதி அன்பு. அதனால் சும்மா பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிட்டான்.

'டண்' - மணி ஒன்று.

இரவு ஏழுமணி வரையில் என்ன செய்வது? அதுவரை அவன் முதல் காட்சிக்குச் சினிமாவுக்குப் போவதாக ஏற்பாடு செய்து விட்டான். இனிமேல் மாற்றினால் அவமானம். படம் இரண்டரை மணிக்கு ஆரம்பம். போவதானால் இத்தனை நேரம் போயிருக்க

வேண்டும். ஜம்பு மேலே என்ன செய்வது என்று யோசித்தான். நல்ல வேளையாக அவன் தம்பி குமார் வீட்டில் இல்லை. நேரே அப்பாவிடமே சொல்லிக்கொண்டு போவதைத் தவிர வேறு வழியில்லை. அவன் மெல்ல மாடிப்படி ஏறினான்.

"நான் ஒரு பையன் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன், அப்பா!"

அம்பாவுக்குத் தூக்கக் கலக்கம்.

"என்ன அது?" என்றார்.

"ஒரு பையன் வீட்டுக்கு..."

"ஒரு பையன் வீட்டுக்கா, சினிமாவுக்கா?

"அவன் எதற்கோ வரச் சொல்லியிருக்கான்..."

"சரி; போய்விட்டு ஜல்தி வந்து விடு" என்று அரை வாயாகச் சொல்லிவிட்டார் அப்பா.

அவ்வளவுதான்! கேட்டால், "பாஸ் இருந்தது. அதற்காகத்தான் என்னை கூப்பிடிருக்கான்" என்று சொல்லிவிடலாம் என்று ஜம்பு தலைதெறிக்க ஓடினான். எதிரே வந்த குமாரைக்கூடக்

கவனியாமல் இடித்து மோதிக் கொண்டு ஜம்பு வெளியே ஓடினன்.

* * *

"அப்பா, அப்பா! ஜம்பு சினிமாவுக்குப் போருன் அப்பா!" என்ருன் குமார்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

"அதோ தெருமுனையிலே வீடர் விசுவமும் நடராஜனும் நிற்கிருர்கள், அப்பா. அவர்கள் தான் சொன்ஞர்கள்! என்ருன் குமார்.

"கூப்பிடு அந்தத் தடியனை!"

ஜம்பு போயே போய்விட்டான். தெருவிலே யாரையும் காணேம்!

* * *

மணி இரண்டு.

ஜம்புவும் மற்ற இரண்டு பையன்களும் தியேட்டர் வாசலிலிருந்த கும்பலுக்குள் நுழைந்தார்கள். முதல் டிக்கட் வாங்காவிட்டாலும் எப்படியாவது டிக்கட் கிடைத்தால் போதுமே!

"டேய், உங்கள் சில்லறையைக் கொடுங்கடா! நான் முதலில் க்யூவுக்குள் நுழைகிறேன். நீங்களும் பின்னல் வந்துவிடுங்கடா!" என்ருன் ஜம்பு. மற்ற இருவரும் சில்லறையை எடுத்து எண்ணிக் கொண்டிருக்கும்போது, "டேய் விசுவம்! அதோ பாரடா! அந்தத் தடியன் இங்கேயும் வந்துவிட்டாண்டா!" என்று கூவினன்.

"எந்தத் தடியண்டா?" என்ருன் நடராஜன்.

"நேத்திக்கி அந்தக் குரங்கைத் தூரத்திக் கொண்டு வந்தானே, அந்த ஸர்க்கஸ்காரன், அவன் தாண்டா!"

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது ஸர்க்கஸ்காரன் இவர்களைப் பார்த்துவிட்டான். ஆனல் ஜம்புவோ க்யூ வரிசைக்குள் வழக்கம்போல லாகவமா[ய்] நுழைந்தான்.

"ட்ரிண்...ட்ரிண்..." என்[று] படம் ஆரம்பிக்க இரண்டாவ[து] மணி அடித்தது. விளக்குகள் எல்லாம் பொக் பொக்கென்று அணைந்தன. ஜம்பு தன் பையைத் தொட்டுப் பார்த்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"டேய்!" என்று கூவினன்.

"என்னடா!" என்ருன் விசுவம்.

"அந்தக் காகிதத்தைக் காணேம்டா!"

"சரியாகப் பாரடா!"

சட்டைப் பை, டிராயர், மேலே, கீழே எங்கும் தேடிப் பார்த்து விட்டான் ஜம்பு. கடிதத்தைக் காணேம்!

கூட்டத்தில் டிக்கட் வாங்கும் போது விழுந்திருக்குமோ, யாராவது எடுத்திருப்பார்களோ என்று மூளையைக் குழப்பிக் கொண்டார்கள். வெளியில் எழுந்துபோய்ப் பார்ப்போமா, இண்டர்வெல்லின் போது பார்த்துக் கொள்ளலாமா என்று பேசிக்கொண்டார்கள்.

"தம்பிகளா! பேசாமல் உட்காருங்கள்!" என்று பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்தவர்கள் சத்தம் போடவே, ஜம்புவும் சிநேகிதர்களும் பேசாமல் உட்கார்ந்து கொண்டார்கள்.

(தொடரும்)

கதை: 'ஆர்வி'

துளிகைத் தீவு
பூமபுகார் துறைமுகத்தில் ஒரே கூட்டம். புலிக் கொடி தாங்கிய மரக்கலம் புறப்படத் தயாராக நிற்கிறது.
சங்கா...
நம் கதை நிகழ்ந்த காலத்தில் துளிகைத் தீவு என்று அற்புதமான தீவு ஒன்று இருந்தது. அத்தீவில் ஒரு கொடிய அரக்கி இருந்தாள். அவள் படுத்தும் கொடுமைகள் தாளாமல் அங்குள்ள சில ஜனங்கள் வந்து சோழ அரசனிடம் முறையிட்டார்கள். அரக்கியைக் கொன்று தீவை மீட்பதற்காக அரசன் நாகநந்தனும் மந்திரி குமாரன் பிம்பருபனும் மரக்கலத்தில் புறப்படுகிறார்கள். அரசன் பரிவாரத்தோடு வந்து வழியனுப்புகிறான். கொம்பு, பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்குகின்றன.
கடல் கடந்து செல்லும் ...வெற்றிக் கொடி நாட்டி விரைவிலே திரும்பி வருக!
பிம்பருபன் வெல்க!
குழந்தாய! நீ திரும்பி வரப் பல மாதங்கள் ஆகலாம். எதற்கும் ... மந்திரவாதியை உன்னுடன் அனுப்புகிறேன். இவன் உன்னுடன் இருக்கும் வரையில் உனக்கு எவ்வித ஆபத்தும் வராது. உன் புகழ் எட்டுத் திசையிலும் பரவ வெற்றியுடன் திரும்புவாயாக!
ஹ்றீம்... ஹ்ரீம்!
அரசே! தங்களிடம் இந்த மோதிரம் இருக்கட்டும். ... எங்களை நீங்கள் ... காணலாம்
... மந்திரவாதி காவல் புரிவான்
பூமபுகாரை விட்டுப் புறப்பட்டு ஒரு மாதமாகிறது. ... அந்தி நேரத்தில......
பிம்பருபா! அதோ பார்! ஏதோ ஒரு தீவு! ஆகா, என்ன அழகான தீவு! சோலைகள்! கழிகள்!
மரக்கலம் தீவை அடைகிறது. படகு ஒன்றில் நாகநந்தனும் பிம்பருபனும் சில படைவீரர்களுடன் கரை சேர்கிறார்கள்
படைவீரர்கள் கரையிலேயே இருக்கட்டும். நாம் இருவர் மட்டும் போய்த் திரும்பிவிடலாம்
... அழுகைக் குரல்!
"வா, பார்க்கலாம்"

கண்ணன்

நில்! இதில் ஏதாவது சூது இருந்தாலும் இருக்கலாம். நீ வெளியிலேயே இரு.
ஹஹ்…ஹஹ்…ஹா!
கரையிலிருந்தவர்களும் கப்பலில் இருந்தவர்களும் என்ன செய்வார்களோ என்று அவர்கள் கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஒரு தீப்பந்தம் தானாக அவர்களை நோக்கி வந்தது.
வாருங்கள்!
தீப்பந்தத்தைப் பின்பற்றி உருவிய வாளுடன் நாகநந்தனும் பிமலரூபனும் நடந்தார்கள். போகப் போகப் படிக்கட்டுகள் போய்க் கொண்டேயிருந்தன.
நில்லுங்கள்! இப்போது நடத்துக்கப் போகிறீர்கள்!
நன்றாக நீந்தி சென்றார்கள்!
எங்கே அந்தப் பயல்கள்!
இது தான் சமயம். உடனே வாளை வீசு!
இயோ!
பயப்படாமல் போங்கள்! குரங்குகள் மட்டும் பத்திரம்!

நீங்கள் யார்?
நீங்கள் தமிழ் நாட்டு வீரர்கள்! பல தீவுகளைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறோம்!
என் பாட்டியைக் கொன்றது யார்?
நான் தான்!
தமிழ் வீரர்களே! அமருங்கள்!
அவர்கள் ஆசனங்களில் அமர்ந்ததும் தாதிகள் வந்து சாமரம் வீசினார்கள், நாட்டியமாடினார்கள், பழத் தட்டுகளை ஏந்தி வந்து உபசரித்தார்கள்.
உங்களிடமுள்ள இரண்டு குளிகைகளையும் கொடுங்கள்!
என்ன மயங்கி விட்டாய்! கொடுக்காதே. என்னிடம் கொடுத்து விடு!
அரசிளங்குமரியின் கண்களைப் பார்த்துவிட்டால் யாருமே மயங்கி விடுவார்கள்.
அரசகுமாரி இப்போது இரண்டு பேரையுமே பார்த்துக் கேட்டாள்.
யார் அங்கே!
இவர்களைப் பாதாளச் சிறைக்குக் கொண்டு செல்லுங்கள்! உம்!
உத்தரவு!

கர்... கா...
ஆதகுந்தனும் பிம்பருபனும் நின்ற இடம் கீழே இறங்கத் தொடங்கியது
பாதாளச் சிறையில் பெரிய ராக்ஷஸச் சிலையருகில் வந்து சேர்ந்தார்கள்.
இந்தா, எனக்கும் ஒரு குளிகை. உனக்கும் ஒரு குளிகை!
உம், என்னுடன் நடவுங்கள்!
அங்கே ஒருவனைக் காலிலும் கையிலும் சங்கிலியைப் பிணைத்து சித்திரவதை செய்தார்கள்.
தலைவரே, தலைவரே!
முடியாதா? ஹஹ்ஹ... ஹஹ்ஹ... ஹா!
அவர்களைச் சங்கிலியால் பிணைத்துக் கட்டி....
இந்த மரியாதைகள் உங்களுக்கும் வேண்டுமா? நல்ல பிள்ளைகளாகக் குளிகைகளைக் கொடுக்கிறீர்களா?
முடியாது!
தமிழ் நாட்டுச் சிங்கம் இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது!
இந்தக் கோரமான சித்திரவதையைக் கண்ட அவர்கள் மனம் கூசியது

பொம்மை உடைந்தது

பூவண்ணன்

1

"டேய் சந்தர்! அந்தப் பொம்மையை என்னிடம் கொடு."

"ஏன் மோகன்?"

"எனக்கு வேண்டும்."

"உன்னிடம் இதைப்போல் வேறொரு பொம்மை இருக்கிறதே! அப்பா உனக்கு வாங்கிக் கொடுத்ததைப்போல் எனக்கும் வாங்கிக் கொடுத்தார். அதை நான் தர முடியாது."

"ஏன்டா, தரமாட்டே? உங்கப்பா காசு போட்டு வாங்கிக் கொடுத்தாரா? அப்பா அம்மா இல்லாத அநாதைப் பயலுக்கு வாயைப் பாரு! மரியாதையாய்க் கொடுத்திடு."

"கொடுக்கவே மாட்டேன்."

"என்ன? கொடுக்க மாட்டியா? அதைத்தான் பார்க்கிறேன்" என்று கர்ஜித்தபடி சந்தரின் கையிலிருந்த பொம்மையைப் பிடுங்க ஓடினான், மோகன். சந்தர், "அம்மா! அம்மா!" என்று கத்திக் கொண்டே உள்ளே ஓடினான். உள்ளே ஏதோ வேலை செய்து கொண்டிருந்த மோகனின் அம்மா-சந்தரின் சித்தி-ஓடிவந்து சந்தரை அணைத்துக்கொண்டாள்.

"ஏன்டா இப்படி ஓடிவரே? என்ன விஷயம்?" என்று அன்பொழுகக் கேட்டுக்கொண்டே



ஆசையோடு அவனைத் தடவிக் கொடுத்தாள். இதற்குள் சந்தரைத் துரத்திக்கொண்டு ஓடி வந்த மோகன் அங்கு வந்தான். மோகனைக் கண்டதும் சந்தர் பயந்து சித்தியை அணைத்துக்கொண்டான்.

"என் சந்தர் இப்படி நடுங்கிறே?" என்று கேட்டாள் சித்தி.

"நேற்று அப்பா வாங்கிக் கொடுத்த பொம்மையை மோகன் கேட்டான். தரமாட்டேன் என்று சொன்னதும், அதைப் பிடுங்கிக் கொள்ள வருகிறான், அம்மா!" சந்தர் குழறிக்கொண்டே சொன்னான்.

சித்திக்குக் கோபம் வந்து விட்டது. தன் மகனைப் பார்த்தாள். "எண்டா இவன் பொம்மையைப் பிடுங்கறே? உன் பொம்மை எங்கே?" என்று கேட்டாள்.

"என் பொம்மை இருக்கிறது. இதுவும் எனக்கு வேண்டும். இந்த அநாதைப் பயலுக்குப் பொம்மை வேறு வேண்டும்?" மோகன் முழுவதும் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் அவன் கன்னத்தில் இரண்டு அறைகள் விழுந்தன.

"இனிமேல் சந்தரை அநாதை என்று சொன்னாயோ, உன் முதுகுத் தோல் உரிந்துவிடும். அவன் பொம்மை மீது கை வைத்தால், உன் கை உடைந்துவிடும், போ!" என்றாள்.

மோகன் சந்தரை முறைத்துப் பார்த்துவிட்டு அழுதுகொண்டே வெளியே சென்றான்.

"சந்தர்! நீ போய் விளையாடு. அவன் ஏதாவது செய்தால் உடனே என்னிடம் சொல்லு" என்று கூறி, சந்தரை அனுப்பினாள்.

சந்தர் சித்தியின் அன்பை நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டே அவ்விடத்தை விட்டு சென்றான்.

2

மோகன் தங்கப்பனின் மக[ன்]. சந்தர் தங்கப்பனின் அண்ண[ன்] தீனதயாளனின் மகன். சந்[தர்] குழந்தையிலேயே அப்[பா] அம்மாவை இழந்த துரதிருஷ்ட[ச]சாலி. அவனைத் தங்கப்பன் தன் சொந்த மகனைப்போல வளர்த்தார்.

சந்தர் தங்கப்பனை அப்பா என்றும், சித்தியை அம்மா என்றும் அழைத்து வந்தான். உலகில் சித்தி தான் வழக்கமாகத் தன் குழந்தை அல்லாத மற்றக் குழந்தையைக் கொடுமை செய்வாள். சித்தி என்றால் சித்திரவதைக்காரி என்று அர்த்தம். ஆனால் இந்தச் சித்தியோ சந்தரைத் தன் மகன் மோகனைவிட அதிக அன்போடு வளர்த்தாள். ஆனால் மோகனுக்கு ஏனோ சந்தரைப் பிடிக்கவில்லை.

எதை வாங்கிக்கொண்டு வந்தாலும், இரண்டு இரண்டாக வாங்கிக் கொண்டு வந்து, மோகனுக்கு ஒன்றும், சந்தருக்கு ஒன்றுமாகத் தருவது தங்கப்பனின் வழக்கம். இதுதான் முக்கியமாக மோகனுக்குப் பிடிக்கவில்லை. அநாதைப் பயலுக்கு இவை ஏன் என்று சண்டை போடுவான். தன் எதிரில் தனக்குச் சமமாக ஒரு அநாதை இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. இந்தச் சிறு வயதிலேயே பொறாமைப் பேய் அவன் மனத்தில் எப்படியோ புகுந்து அவனை ஆட்டியது. அதைக் கண்டு அவனது அப்பாவும் அம்மாவும் வருத்தப்பட்டார்கள். அவனைத் திருத்த முயன்று, தோல்வியும் அடைந்தார்கள்.

அன்று, தங்கப்பன் இரண்டு பொம்மைகளை வாங்கிக்கொண்டு வந்து இருவருக்கும் ஒவ்வொன்று கொடுத்தான். அதன் பிறகு நடந்தது தான் ஆரம்பத்தில் படித்தது.

3

அம்மாவிடம் அடி வாங்கிய மோகன் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். அவனுக்குச் சந்தர்மீது கோபம் கோபமாக வந்தது.

"எப்படியாகிலும், அவன் வைத்திருக்கும் பொம்மையை எடுத்துக் கொள்ள வேண்டும். ஐயையோ, அப்படிச் செய்யக்கூடாது. அம்மா நாலு அறை கொடுத்து அதைப் பிடுங்கி அவனிடம் கொடுத்துவிடுவாள். அதைச் சுக்கு நூறாக, தூள் தூளாக, உடைத்துவிடவேண்டும். ஆமாம்! அப்படித்தான் செய்யவேண்டும்." மோகன் இப்படித்தான் தீர்மானம் செய்துகொண்டான்.

அன்றிரவு பாடம் படிக்கும்போதுகூட அவனுக்கு அதே நினைவுதான். புத்தகத்தைக்கூட மூடி வைக்காமல் சாப்பிடச் சென்றான். சாப்பிட்ட பிறகு சந்தர் பொம்மையை எங்கே வைத்திருக்கிறான் என்பதையும் பார்த்துக் கொண்டான். அதன் பிறகு தூங்கச் சென்றான்.

இரவு மணி பன்னிரண்டு!

மோகன் திருடனைப் போல மெதுவாக எழுந்தான். சந்தர் பொம்மையை வைத்திருக்கும் இடத்தை நோக்கி மெதுவாக நடந்தான். சந்தரின் பொம்மை மாடத்தில் இருந்தது. அதைத் தன் நடுங்கும் கைகளால் எடுத்தான். சுற்று முற்றும் பார்த்துவிட்டு, அதைத் தூக்கி எறிந்தான். நல்ல வேளை, பொம்மை கீழே விழுந்த சப்தத்தைக் கேட்டு யாரும் எழுந்திருக்கவில்லை. ஒரு நிமிஷத்திற்குமுன் உள்ளத்தைக் கவரும் பொம்மையாக இருந்தது, இப்போது சிறுசிறு துண்டுகளாகச் சிதறிக் கிடந்தது. அதைப் பார்த்து வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் மோகன்.

திடீரென்று அவனுடைய பொம்மையைப் பற்றிய நினைவு வந்தது. "அதை யாராவது எடுத்து உடைத்து விட்டிருந்தால்......சே! சே! அதை எப்படி உடைக்க முடியும்? நான்தான் உயரமான, சந்தருக்கு எட்டாத பலகையின்மீது நாற்காலியில் ஏறி வைத்திருக்கிறேனே! எதற்கும் போய்த்தான் பார்ப்போம்!"—ஒரே நிமிஷத்தில் இத்தனை எண்ணங்களும், அந்த இளம் உள்ளத்தில் மின்னலைப் போலத் தோன்றி மறைந்தன.

உடனே ஓடித் தன் அறைக்குச் சென்றான். லைட்டைப் போட்டான். பிறகு பொம்மையை வைத்த பலகையை அண்ணாந்து பார்த்தான். அவன் மனம் 'பகீர்' என்றது. அங்கே அவனுடைய பொம்மை இல்லை. ஓர் எலி இருந்தது. அவன் குனிந்து கீழே பார்த்தான். அவன் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை. அங்கே அவனுடைய அருமையான பொம்மை சுக்கல் சுக்கலாக நொறுங்கிச் சிதறிக் கிடந்தது. கலங்கிய கண்களுடன் மீண்டும் மேலே பார்த்தான். அங்கே இருந்த எலி, "மோகன், நீ சந்தர் பொம்மையை உடைத்து விட்டாய். இதோ, இங்கே உன் பொம்மையை நான் கீழே தள்ளி உடைத்துவிட்டேன். இனிமேலாவது தெரிந்துகொள். தீமை செய்தால் தீமைதான் விளையும்" என்று சொல்வதுபோல் இருந்தது.

மோகனால் நிற்க முடியவில்லை. அவன் நெஞ்சு குமுறும் எரிமலையாயிற்று. அவன் உள்ளம் கொந்தளிக்கும் கடலாயிற்று. அருகே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் கண்கள் எதிரே இருந்த மேஜையைப் பார்த்தன.

அங்கே இரவு மூடாமல் போட விட்டுப்போன தமிழ்ப் பாடப் பு கம் விரிந்து கிடந்தது. அது செ யுள் பகுதி. அதிலிருந்த -

"பிறர்க் கின்னா முற்பகல் செய யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்"—என்ற குறள் அவனைப் பார்த்துச் சிரித்தது.

"ஐயோ கடவுளே! பிறருக்கு முற்பகல் துன்பம் செய்தால் அது பிற்பகல் நம்மைத்தானே வந்தடைகிறது. நன்மைக்கு நன்மை. தீமைக்குத் தீமை. இதை நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன். இனிமேல் என் மனமார ஒரு பிழையும் செய்யமாட்டேன். எவருக்கும் எப்போதும் தீமையே செய்யமாட்டேன்" என்று கதறினான், தன் மனத்திற்குள்ளே. பிறகு லைட்டை அணைத்துவிட்டுப் படுத்தான்.

4

மறுநாள் தங்கப்பன், அவன் சித்தி ஆகிய எல்லாரும் இரண்டு பொம்மைகளும் எப்படி உடைந்தன என்பது புரியாமல் ஆச்சரியம் அடைந்தனர். மோகன் எனக்குத் தெரியாது என்று கூறிவிட்டான். உண்மையைச் சொல்லவில்லை.

அன்றிலிருந்து சந்தரிடம் மோகன் செலுத்திய அன்பு - அவனிடம் காட்டிய அக்கறை - அவனைப் பாதுகாத்த முறை - அவனுக்காகப் பரிந்து பேசிய பேச்சு - ஆகிய இவற்றை எல்லாம் கண்டு தங்கப்பனும் அவன் மனைவியும் ஆச்சரியம் அடைந்தார்கள்; அதோடு ஆனந்தமும் அடைந்தார்கள்.

ஆனால் அன்றிரவில் நடந்த விஷயம் இன்னும் யாருக்கும் தெரியாது. மோகனும் அதை யாரிடமும் சொல்லவே இல்லை.

சித்திரத்தில் க்விஸ்

கீழ்க்கண்டவற்றில் எது சரி என்று குறிப்பிட வேண்டும். தெரியாதவர்கள் கடைசிப் பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.



1. ஆர்க்காட்டு அரண்மனை; 2. திண்டுக்கல் கோட்டை; 3. திருச்சி மலைக்கோட்டை; 4. செஞ்சிக் கோட்டை.

1. வள்ளியும் மானும்; 2. சீதையும் மானும்; 3 சகுந்தலையும் மானும்; 4. விரிசிகையும் மானும்.



1. கடல் சிங்கம்; 2. ஸீல்; 3. திமிங்கிலம். 4. கடல் நாய்.

1. ராக்கட் விமானம்; 2. ராடார் விமானம்; 3. ஜெட் விமானம்; 4. பாம்பர் விமானம்.

சென்னையில் 1. சர்வகலாசாலை; 2. ரிப்பன் கட்டிடம்; 3. சென்ட்ரல் ஸ்டேஷன்; 4. சட்ட சபைக் கட்டிடம்.

1. காண்டாமிருகம்; 2. ஹிப்போபொடமஸ்; 3. நீர் யானை; 4. டாபிர் (காட்டுப் பன்றி.)



1. அஜந்தா குகைச் சிற்பங்கள்; 2. நாளந்தா குகைச் சிற்பங்கள்; 3. மகாபலிபுரச் சிற்பங்கள்; 4. எல்லோராச்சிற்பங்கள்



எலிகள்!

‘ தமிழகன் ’

1. ஓடியாடிச் சாடிவிளை
யாடுகின்ற எலிகள் - அவை
ஒவ்வொன்றுமே பண்டங்களை
உருட்டுவதில் புலிகள்!

2. மாடியும்கீழ் வீடுமவர்
வாழுகின்ற ராஜ்யம்; - அவை
மனதுவைத்தால் வைத்தவற்றுள்
மீதிஎன்ன? - பூஜ்யம்!

3. எண்ணினாலும் நூறிருக்கும்
மொத்தமதன் கூட்டம்! - பண்டம்
எங்கெங்குண்டோ அங்கங்கெல்லாம்
இருக்குமதன் நாட்டம்!

4. கண்ணிபோட்டும் பார்த்துவிட்டோம்;
குறையும்வழி காணோம்; - அவை
கண்ணில்படப் பண்டம் வைத்துக்
கருத்(து) ஏமாறிப் போனோம்!

5. உரியில் காய்ச்சி வைத்த நெய்யும்
திரும்பிப் பார்த்தால் குறையும்! - எலியை
ஓடியடிப் போம் எனிலோ
கதவிடுக்கில் மறையும்!

6. பெரியஎலி பானையையும்
பொந்தடித்துப் போடும்; - நார்ப்
பெட்டியையும் துளைத்ததனில்
சீடை வடை தேடும்!

7. பட்டுச்சேலை வைத்ததையும்
பார்த்துக்கொண்டே பொருமும்; - நல்ல
பழஞ்சீப்பைக் கண்டுவிட்டால்
போதும்; அங்கே திரும்பும்!

8. கெட்டியான மூடிபோட்டு
வைத்துவிட்ட போதும் - அங்கும்
'கிறுபுறு'வென் றே மென்றுதின்(று)
ஏய்த்துவிட்டுப் போகும்!

9. இத்தனைக்கும் பூனைகள்தான்
வந்துவிட்டால் போதும்; - வளைக்குள்
எலிகளெல்லாம் போம்! தெரியா(து)
இருந்தவிடம் ஏதும்!

10. பித்தர்களே நாடெல்லாம்
புகுந்துவிட்டாற் போலும் - எலியால்
பெரியதொரு போராட்டம்
வீட்டின் மேலும் கீழும்!





ரன்னர் விளையாட்டு

தேவையானவைகள்: 13 பேர்; 2 எழுதின தபால் கார்டுகள்.

ஆடும் முறை: முதல் பையனிடமும் பன்னிரண்டாவது பையனிடமும் இரு கார்டுகளைக் கொடுக்கவேண்டும். தலைவன் விஸில் ஊதியவுடன் முதல் பையன் படத்தில் காட்டியபடி ஓடி, எதிர்த் திசையில் உள்ள பையன்களை எல்லாம் (7, 8, 9, 10, 11, 12,) சுற்றித் தன் இடத்திற்கு வந்து பக்கத்துப் பையனிடம் கார்டைக் கொடுக்கவேண்டும். அவனும் அதே மாதிரி சுற்றிப் பக்கத்துப் பையனிடம் கொடுக்கவேண்டும். எதிர்த் திசையில் உள்ளவர்களும் இதே மாதிரி செய்யவேண்டும். கடைசிப் பையன்களிடம் (6, 7) கார்டுகள் வரும். அவ்விருவர்களில் யார் முதலில் கார்டைத் தலைவரிடம் ஒப்படைக்கிருனே அவன்தான் ஜயித்தவன். அந்தப் பையன் உள்ள கட்சிதான் ஜயித்த கட்சி.

குறிப்பு: கார்டுகளை (1, 12) பையன்களிடமும் கொடுக்கலாம். அல்லது (1, 7) பையன்களிடமும் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால் 7-ஆவது பையன் (1, 2, 3, 4, 5, 6,) பையன்களைச் சுற்றி வரவேண்டும்.

—ப. ராகவேந்திர

பேனாத் திருடன்

என். எஸ். ஸ்ரீ.

5

கோபுவின் மார்பு 'படக் படக்' என்று அடித்துக்கொண்டது.

"இந்த மோட்டார் யாருடையதோ? இது எங்கே செல்கிறதோ? மூட்டை முடிச்சுக்களை இறக்கும் பொழுது நான் இவர்கள் கண்ணில் படாமல் இருக்கவேண்டுமே. பிறகு இவர்களுக்குத் தெரியாமல் தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டும். இதெல்லாம் எப்படி முடியப்போகிறதோ?" என்று கோபுவின் மனம் பெரும் யோசனையில் மூழ்கியது.

ஐம்பது மைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் திடீரென்று ஓரிடத்தில் நின்றது.

"இதுதான்" என்று யாரோ சொன்ன குரல் கோபுவின் காதில் விழுந்தது.

"ஏன்? என்ன சமாசாரம்?" என்று வண்டியினுள் இருந்தவர்கள் கேட்டதும் கோபுவின் காதில் அரைகுறையாய் விழுந்தது.

"நாங்கள் வண்டியைச் சோதனை போடவேண்டும்!"

"ஏன், எதற்காக?"

"சந்தேகத்தின் பேரில்."

"என்ன சந்தேகம்?"

"பேனா, கடிகாரங்கள் முதலியவற்றைப் பார்க்கவேண்டும்."

"பேனா, கடிகாரங்களா?"

"அதுதான், புதுச்சேரியிலிருந்து வந்த சாமான்கள்."

"என்ன சொல்லுகிறீர்கள்? ஒன்றும் புரியவில்லையே!"

"புதுச்சேரியிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவந்திருக்கிறீர்களே, அதைத்தான் சொல்லுகிறோம்."

"புதுச்சேரியிலிருந்தா? கள்ளத்தனமாகவா?"

"ஆமாம்."

"அப்படி ஒன்றும் எங்களிடம் கிடையாது."

"அவரைக் கேட்டுக்கொண்டிருப்பானேன்! பார்த்தால் தெரிகிறது" என்று இன்னொருவன் இப்போது குறுக்கிட்டுச் சொன்னது கோபுவின் காதில் விழுந்தது.

"ஆகா, தாராளமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்!" என்ற பதிலும் கோபுவின் காதில் விழுந்தது.

"அதற்குத்தானே இவ்வளவு நேரமாக நாங்கள் இங்கே காத்துக்கொண்டிருக்கிறோம்!"

"அப்படியா? ஆனால் நீங்கள் எதிர்பார்க்கும் வண்டி வேறு வண்டியாக இருக்கவேண்டும். இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் தாராளமாய்ப் பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் எதிர்பார்க்கும் பேனா, கடிகாரம் ஒன்றும் எங்களிடம் கிடையாது."

"இருந்தாலும் நாங்கள் பார்த்துவிடுவது நல்லதில்லையா?"

"ஆகா, பாருங்கள்."

உடனே மோட்டாரின் கதவு திறக்கப்பட்ட சப்தம் கோபுவின் காதில் கேட்டது.

"எங்கே, சாமான்கள் ஒன்றையும் காணோம்?"

"எல்லாம் மோட்டாரின் பின் பக்கத்தில் இருக்கிறது."

கோபுவுக்கு உதறல் எடுத்துக் கொண்டது. அவர்கள் பின்னல் சாமான்களைச் சோதனை போடும் பொழுது தன்னைப் பார்த்து விட்டால் என்ன செய்வது? இந்த மாதிரி ஒரு நிலை ஏற்படும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

மோட்டாரின் பின் கதவு திறக்கப்பட்டது.

முதல் வரிசையில் இருந்த இரண்டு பெட்டிகள் கீழே எடுத்து வைக்கப்பட்டன. வந்தவர்கள் மோட்டாரின் சொந்தக்காரரைப் பெட்டியின் சாவியைக் கேட்டார்கள். சாவியை வாங்கிக்கொண்டு பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த பேனு, கடிகாரம் ஒன்றும் அந்தப் பெட்டியில் இல்லை.

"சரி, மீதி சாமான்களையும் எடுங்கள்; பார்க்கலாம்" என்றான் ஒருவன்.

உடனே மற்றும் சில சாமான்கள் கீழே எடுத்து வைக்கப்பட்டன. அவர்கள் எதிர்பார்த்த பொருள்கள் அவைகளிலும் இல்லை.

"மோட்டார் நம்பரைத் தவறுதலாகக் குறித்துக்கொண்டு விட்டோமோ? இதே நம்பர்தானு? சரியாகப் பாரத்தாயா?" என்றான் ஒருவன்.

"தவறுதலா? அதெல்லாம் ஒன்றுமில்லை. இதே நம்பர்தான்" என்றான் இன்னொருவன்.

"அப்படியானல் இவைகளில் ஒன்றையும் காணோமே."

"அதோ படுக்கை இருக்கிறதே; இன்னும் அதைப் பார்க்கவில்லையே."

"படுக்கையா? அதிலா இருக்கப் போகிறது?"

"நன்ருகச் சொன்னய்! அதில் தான் இருக்கும். உனக்குத் தெரியாது போலிருக்கிறது. ஆமாம், நீ வேலைக்குப் புதிதுதானே. அடேயப்பா! இந்த மனிதர்கள் இருக்கிருர்களே, எங்கே வேண்டுமானலும் மறைத்து ஒளித்து எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அதைப் பற்றி அவ்வப்போது பத்திரிகைகளில் படிக்கிறேமே!"

"சரி, பார்! உன் இஷ்டத்தையும் ஏன் கெடுக்கவேண்டும்!"

இதைக் கேட்டதுதான் தாமதம்; கோபுவுக்கு மூச்சே நின்றுவிட்ட மாதிரி இருந்தது. ஏனென்ருல் அந்தப் படுக்கையின் பின்னல்தான் அவன் பதுங்கிக்கொண்டிருக்கிருன். 'அதை எடுத்துவிட்டால் திருட்டு விழி விழிக்க வேண்டியதுதான். வேறு வழியில்லை. இந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. அகப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான்' என்று முடிவு செய்துவிட்டான் கோபு.

அவர்கள் சடைசியாகப் படுக்கையையும் எடுத்தார்கள்.

இப்பொழுதுதான் கோபு வெளியே இருப்பவர்களைப் பார்க்க முடிந்தது. பார்த்தால், யமதூதர்கள் மாதிரி நான்கு போலீஸ்காரர்கள்! நடுநடுங்கிவிட்டான் கோபு.

அவர்களுடைய கவனம் படுக்கையில் இருந்ததால் கோபுவை அவர்கள் பார்க்கவில்லை. அத்துடன் ஒரு சிறிய பழக்கூடை ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. அது சற்று மறைத்தது.

படுக்கையைப் பிரித்துப் பார்த்தார்கள். அதனுள் ஒரு தஸ்தாவேஜு இருந்தது. அதைக்கையிலெடுத்துப்பார்த்தான் ஒரு ஜவான். அதைப் படித்துப் பார்த்துவிட்டு, "அடடே, கொஞ்ச நேரத்துக்கு முன்பு போலீஸ் ஸ்டேஷனில் களவு போய்விட்டதாக ஜமீன்தார் எழுதிவைத்தாரே, அந்த ரிகார்டு அல்லவா இது?" என்ருன்.

"ஆமாம், ஆமாம், அதுவேதான்!" என்ருன் அதை வாங்கிப் பார்த்த இன்னெருவன்.

"ஆமாம். இது இந்தப் பெட்டிக்குள் எப்படி வந்தது?" என்ருன் இன்னெருவன்.

"எப்படி வரும்? திருடிக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதனல்தான் அந்த ஜமீன்தார் புகார் செய்திருக்கிருர்!" என்ருன் மற்றெருவன்.

"அப்படியானல் நம் முயற்சி வீண்போகவில்லை. புதுச்சேரி சாமான்கள் இல்லாவிட்டாலும் ஜமீன்தார் ரிகார்டாவது அகப்பட்டிருக்கிறதே!" என்ருன் ஒரு ஜவான்.

உடனே அவன் மோட்டாரின் சொந்தக்காரரைப் பார்த்து, "ஓய்! இது ஏது இந்த ரிகார்டு?" என்ருன்.

"இதுவா? இது..எனக்குத்தெரியாதே" என்ருர் மோட்டாரின் சொந்தக்காரர்.

"ஐயா உண்மையைச் சொல்கிறீரா அல்லது..." என்று கண்களை உருட்டினன் போலீஸ்காரன்.

"இல்லை, வந்து...வந்து...இல்லை" என்று கையைப் பிசைந்தார் மோட்டாரின் சொந்தக்காரர்.

இதையெல்லாம் கோபு உள்ளேயிருந்து கவனித்துக்கொண்டிருந்தான்!

இந்த மட்டோடு அவர்கள் தன்னைக் கவனிக்காமல் போய்விட வேண்டுமே என்றுதான் அவன் மனம் எண்ணமிட்டது.

இந்தச் சமயத்தில் "அதோ யாரோ உட்கார்ந்திருக்கிற மாதிரி இருக்கிறதே" என்று கோபுவைச் சுட்டிக் காட்டினான் ஒரு போலீஸ்காரன்.

"ஆமாம், ஆமாம். அதோ பழக் கூடைக்குப் பின்னால் யாரோ உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான் மற்றொருவன்.

உடனே ஒரு போலீஸ்காரன் பழக் கூடையை எடுத்தான்.

கோபு மோட்டாரோடு மோட்டாராய் ஒண்டிக்கொண்டிருந்தான்.

"இறங்கு தம்பி!" என்றான் பழக் கூடையை எடுத்த போலீஸ்காரன் கோபுவை நோக்கி.

இதற்கு மேல் கோபு என்ன செய்யமுடியும்?

மறு வார்த்தை சொல்லாமல் ஆடு திருடின கள்ளன் மாதிரி கீழே இறங்கினான். எல்லாரும் வைத்த விழி வாங்காதபடி அவனையே வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு ஜவான் கோபுவைக் கால் முதல் தலை வரையில் ஒருதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அடடே! உன்னிடம் இருக்கும் புகைப் படத்தை எடு, பார்க்கலாம்" என்றான் இன்னொரு போலீஸ் ஜவானைப் பார்த்து.

உடனே அவன் தன்னிடமிருந்த புகைப்படத்தை எடுத்துக் கொடுத்தான்.

முதலில் பேசிய போலீஸ்காரன் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, "இவனேதான்!" என்றான்.

மீதிப் பேர்களும், "ஆமாம், ஆமாம்; இவனேதான்!" என்றார்கள்.

"இவன் எப்படி வந்தான் இங்கே?" என்றான் ஒரு ஜவான்.

"இது ஒரு திருட்டுக் கோஷ்டி போலிருக்கிறது. நாகரிகமாக மோட்டாரை வைத்துக்கொண்டு திருட்டு வேலை செய்து வருகிறார்கள் போலிருக்கிறது!" என்று சொல்லிவிட்டு, "உன் பெயர் என்ன தம்பி?" என்றான் கோபுவை நோக்கி, புகைப்படத்தை வைத்திருந்த போலீஸ்காரன்.

கோபு தன் சொந்தப் பெயரைச் சொல்லாமல் வேறு பெயரைச் சொல்லி அவர்களை ஏமாற்ற வேண்டுமென்று, "என் பெயர் நாகபூஷணம்" என்றான்.

"சரிதான், இதே பேர்வழிதான்! இதோ இந்தப் புகைப்படத்திலும் 'நாகபூஷணம்' என்றுதான் எழுதியிருக்கிறது. அடடா; எத்தனை நாளாய் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறோம்! அப்படியா சமாசாரம்" என்று ஆச்சரியப்பட்டான் அந்த ஜவான்.

"இவன் உங்கள் கையாளா? அதற்குத்தான் பின்னால் போட்டு மறைத்து வைத்திருக்கிறீர்களா?" என்றான் மோட்டாரின் சொந்தக்காரரைப் பார்த்து.

மோட்டாரின் சொந்தக்காரர் ஒன்றும் பேசத் தோன்றாமல் பேந்தப் பேந்த விழித்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

பைனாகுலர்

'ராஜன்'

கோமதி எழுந்திருந்து கட்டிலின்மீது உட்கார்ந்து கொண்டு, மாடியிலிருந்த அந்த அறையின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். வான வீதியில் பறவைகள் கிரீச் கிரீச்சென்று கத்திக்கொண்டு சிறகடித்துப் பறந்தன. கீழே பங்களாத் தோட்டத்தில், அவர்கள் வளர்த்து வந்த மான் குட்டிகளும், வெள்ளை முயல்களும் ஓடியாடி விளையாடின. தூரத்தில் பங்களாவுக்கு அப்பால் சில தம்பி தங்கைகள் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்தார்கள். கோமதிக்கு எழுந்து சென்று வெளியே ஓடியாடி விளையாட வேண்டுமென்று தோன்றியது. ஆனால் டாக்டர் இன்னும் ஒரு வாரத்துக்கு அவள் கட்டிலை விட்டுக் கீழே இறங்கக் கூடாதென்று கண்டிப்

பாகச சொல்லியிருக்கிறாரே! பாழாய்ப்போன டைபாய்டு ஜுரம் அவளுக்கு எதற்காகத்தான் வந்ததோ? அவள் பைத்தியம் பிடித்தமாதிரி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து ஜன்னல் வழியாக வெளியுலகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குஷாலாக விசில் அடித்துக் கொண்டே மாடி மீது ஓடிவந்த அவளுடைய அண்ணன் ரவி, "என்ன கோமதி? ஒரு மாதிரியா உட்கார்ந்திருக்கியே? மறுபடியும் ஜுரம் வரல்லியே?" என்று கேட்டுவிட்டு அவளுக்குச் சமீபத்தில் வந்து கனிவுடன் பார்த்தான்.

கோமதி திரும்பி, "ரவி! எனக்குப் பைத்தியம் பிடிச்சாப்பலேயிருக்குடா! வெளியே போய் எத்தனை நாளாச்சு? ஓடியாடி விளையாடணும் போலேயிருக்கு" என்றாள் பரிதாபமாக.

"அட, பைத்தியமே! இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோ! இல்லேன்னா மறுபடியும் ஜுரம் வந்துவிடும். இந்தா, இந்தப் பைனாகுலர் மூலமா வெளியே என்ன என்ன நடக்குதுன்னு வேடிக்கை பார்! ஒரு மைல் தூரத்திலே நடக்கறதெல்லாம்கூடப் பக்கத்திலேயே நடக்கறமாதிரித் தெரியும்!" என்று சொல்லிக்கொண்டே ரவி ஓடிப்போய் பக்கத்திலிருந்த ஒரு மேஜை அறையைத் திறந்து, அதிலிருந்த பைனாகுலரை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "எதுடா இது?" என்று கேட்டுக்கொண்டே அதை வாங்கி அந்தக் கண்ணாடி மூலமாக வெளியே பார்த்தாள்.

ஆஹா! சுமார் ஒரு மைல் தூரத்தில் தெரிந்த ஒரு ரெயில்வே லயன் அவளுக்கு வெகு சமீபத்தில் தெரிந்தது! வானத்தில் பறந்த ஒரு சிட்டுக் குருவி அவளுடைய மூக்கின் மீது உராய்ந்துகொண்டு பறப்பதுபோல் இருந்தது! மாமரத்தில் குலுங்கிய காய்கள் கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதுபோல் தெரிந்தன.

அவளுக்குக் குஷி தாளவில்லை. "டேய், ரவி! எதுடா இது?" என்று மறுபடியும் கேட்டுக்கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

ரவி அங்கே இல்லை. அவன் அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமலே அவசரமாக எங்கேயோ ஓட்டம் பிடித்தான்.

கோமதி பைனாகுலர் மூலம் பார்த்துக்கொண்டிருந்தாள். இப்போது ரெயில்வே லயனில் ஒரு ரெயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அடேயப்பா! அந்த ரெயில் எஞ்சினில்தான் எவ்வளவு கரும்புகை குபுகுபுவென்று கிளம்புகிறது! அந்தப் புகையின் மத்தியில் சில நெருப்புப் பொறிகளும் பறந்தன. அந்த நெருப்புப் பொறிகளில் ஒன்று ரெயில்வே லயனுக்குச் சமீபத்திலிருந்த ஒரு வீட்டின் கூரையின்மீது விழுவதைக்கூட அவளால் பார்க்க முடிந்தது!

சிறிது நேரம் கழிந்தது.

ரெயில் ஓடி மறைந்துவிட்டது.

ரெயில்வே லயனுக்குச் சமீபத்திலிருந்த அந்த வீட்டின் மீது கொஞ்சம் கொஞ்சமாகப் புகைப் படலம் சூழ்ந்தது. அது ஏன்?

அவள் கூர்ந்து கவனித்தாள். ஆஹா! அந்த வீடு பற்றிக்கொண்டது! நெருப்புப் பொறி விழுந்த

தன் பயன் அது! அந்த வீட்டிற்குள் ஒருவருமே இல்லையா?

கோமதி நன்றாகப் பார்த்தாள். அந்த வீடு பூட்டிக் கிடந்தது! அவ்வளவுதான்; உடனே அவள் கூவினாள். "ரவி! டேய், ரவி!"

பதில் இல்லை.

"அம்மா! அம்மா!"—தொண்டை கிழியக் கத்தினாள்.

"என்னடி அப்படிக் கத்தறே?" என்று அலறிப் புடைத்துக் கேட்டுக்கொண்டு ஓட்டமாக ஓடி வந்தாள் அம்மா.

"ரெயில்வே லயனுக்குப் பக்கத்திலே இருக்கும் வீடு பத்திக் கொண்டதம்மா! அந்த வீட்டிலே ஒருத்தருமே இல்லைபோலிருக்கு! இதோ நீயே பாரேன்!" என்றாள் கோமதி.

அம்மாவும் பைனாகுலர் வழியாகப் பார்த்தாள். அந்த வீடு நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிவதைக் கண்டாள். அவள் சிறிதும் தயங்கவில்லை. போலீஸுக்கு அந்தத் தகவலைத் தெரிவிப்பதற்காக ஓட்டமாக ஓடிப் போய்ப் பக்கத்து அறையிலிருந்த டெலிபோனை எடுத்து டயலைத் திருப்பினாள்.

அடுத்த ஐந்து நிமிஷத்திற்கெல்லாம், தீயணைக்கும் படைபோன்று, தீப்பற்றிக்கொண்ட வீட்டை முற்றுகையிட்டது. அதை அணைத்துத் தீர்க்கும் வரையில் கோமதி பைனாகுலர் வழியாக அதையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்! அவளுடைய சோர்வெல்லாம் போன இடம் தெரியவில்லை. அவள் மனசு இப்போதுதான் நிம்மதியடைந்தது.

அரை மணி நேரம் கழிந்தது. கோமதியின் அறைக்குள் நுழைந்தான் ரவி. "கோமதி! நீ மாத்திரம் அந்த வீடு தீப்பத்திக்கறதைப் பார்க்கலேன்னா, அது பஸ்மமாகப் போயிருக்கும்! நல்லகாலம்! சேதம் ஒண்ணுமில்லே! அந்த வீடு யாருடையது தெரியுமா? என்னுடைய 'கிளாஸ்மேட்' ரகுநாதனுடைய வீடுதான் அது! அவங்க வீட்டிலே எல்லாரும் வெளியே போயிருந்தாங்களாம்! அவன் கிட்டே இரவல் வாங்கி வந்த பைனாகுலர்தான் இது. உன்னால்தான் இவ்வளவு சீக்கிரத்தில் அதிகச் சேதம் ஏற்படாமல் தீயை அணைக்க முடிந்தது என்ற விஷயத்தைக் கேட்டதும், அவன் இந்தப் பைனாகுலரை உனக்கே பிரஸண்ட் பண்ணிடச் சொல்லிட்டான்!" என்றான் சிரித்துக்கொண்டே.

தந்தையும் மகனும்

குகப்ரியை

ஓர் அழகிய சிற்றூர். அதிலே ஒரு மகா வித்துவான் இருந்தார். அவர் பல பாஷைகளிலே வல்லவர். அருமையான கவிதைகள் பல அவர் எழுதியிருந்தார். அவருக்கு ஒரே புதல்வன். அவனும் சிறு வயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கினான். அவ னுடைய கவிதைகள் அவன் மேதையாக விளங்குவான் என்பதை அறிவித்தன. அவனுடைய கவிதைகளையும் பேச்சுவன்மையையும் கண்டு உலகமே அதிசயித்தது. ஆனால் அவன் தந்தையோ



ஒரு நாள்கூட அவன் கவிதைகளைக் கேட்டதில்லை.

அக்காலத்து வழக்கப்படி குருகுலத்திலே கல்வி பயின்று முடித்தவுடன் அவனுக்கு விவாகமாகியிருந்தது. அவன் மனைவி தன் தாயின் வீட்டிலேயே வசித்து வந்தாள்.

அவன் தாயும் கல்வி கேள்விகளில் சிறந்தவள். மகன் ஒவ்வொரு நாளும் தான் புதிதாய் எழுதிய கவிதைகளைத் தாயாருக்குப் படித்துக் காட்டுவான். அவள் கேட்டு மனம் பூரிப்பாள். 'அடாடா! இவற்றை ஒரு நாளாவது அவன் தகப்பனார் ரஸித்து உத்ஸாகப் படுத்துவதில்லையே, ஏன்?' என்று நினைப்பாள். ஆனால் வாய்விட்டுச் சொன்னால், மகன் தகப்பனாரை அலட்சியம் செய்துவிடுவான் என்று நினைத்துப் பேசாயலிருந்துவிடுவாள்.

மகனும், 'அடாடா! இவ்வளவு அருமையான கவிதைகளை எழுதுகிறோம். ஊரே புகழுகிறது. இந்த அப்பா மட்டும் ஏன் இப்படி இருக்கிறார்? ஒரு நாளாவது நம்மைக் கேட்கக்கூடாதா?' என்றெல்லாம் நினைத்தான்.

நாட்கள் சென்று கொண்டே இருந்தன. அவனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். தகப்பனார் மற்றும் ஏதேதோ விஷயங்களை யெல்லாம் பேசினாரே அன்றி இவன் கவிதை சம்பந்தமாய் ஒரு வார்த்தையேனும் பேசவே இல்லை. நாளுக்கு நாள் தகப்பனாரின் விஷயத்தில் அலட்சியமும் வெறுப்பும் வளர்ந்து வந்தன. இப்படிப் பட்ட ஒரு தகப்பனாரைக் கொன்றால்தானென்ன என்று கூடத் தோன்றத் தொடங்கிற்று. 'சரி, இன்றிரவு தூங்கும்பொழுது இவர் தலையிலே கல்லைப் போட்டு விடுவது' என்று தீர்மானித்தான். எங்கிருந்தோ ஒரு குண்டுக்கல்லை எடுத்து வந்து தகப்பனார் படுக்கும் கட்டிலுக்கு அடியிலே வைத்து விட்டு அங்கேயே ஒளிந்துகொண்டிருந்தான்.

இப்படிப்பட்ட ஒரு கொடிய செயலைச் செய்யலாமா என்று அவனுக்குத் தோன்றவே இல்லை.

இரவு வந்தது. பெரியவர் பூஜை புரஸ்காரங்களை முடித்துக்கொண்டு சாப்பிட வந்தார். மனைவியைக் கூப்பிட்டு மகன் சாப்பிட வரவில்லையா என்று கேட்டார். "பொழுது சாயு முன்பே சாப்பிட்டு விட்டு வெளியே போனான்" என்றாள் அந்த அம்மணி.

இந்த வார்த்தைகள் அவன் காதுகளிலும் விழுந்தன. "ஓகோ! நம்மைப்பற்றி ரொம்ப

வும் அக்கறையுள்ளவர் போல் விசாரிப்பதைப் பார்'' என்று குமுறினன் அவன். கட்டிலுக்கு அடியில் ஒரே புழுக்கம். மூச்சுத் திணறுகிறது. எறும்புகள் வேறு ஒரு பக்கம் கடிக்கின்றன. அங்கே இருக்கவும் மாட்டாமல் வெளியே வரவும் மாட்டாமல் தவியாய்த் தவித்தான்.

பிறகு அவர் மிகவும் நிதானமாக இரவில் படுக்குமுன் சொல்ல வேண்டிய ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டே படுக்கையில் படுத்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அவர் மனைவி சிறு செம்பிலே பாலை எடுத்துக் கொண்டு வந்தாள். வற்றக் காய்ச்சிச் சர்க்கரை போட்டிருந்தது அந்தப் பால். அந்தச் செம்பிலிருந்து குங்குமப்பூவின் வாசனையும் பாலின் வாசனையும் அந்த அறை முழுவதும் கம்மென்று மணத்தது.

அவர் கண்களை மூடியவராய்ச் சிந்தையில் ஆழ்ந்திருந்தார். ''என்ன மெய்ம்மறந்து சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறீர்களே. பால் கொண்டு வந்தேன். இது புது வெள்ளைப் பசுவின் பால். இயற்கையிலேயே சர்க்கரையிட்டது போல் இனிக்கிறது. வாசனையும் அதிகம்'' என்றாள் அந்த அம்மணி.

அவர் மெதுவாய்ச் சிரித்தார். ''இந்தப் பாலின் இனிமையைப் பற்றிப் பிரமாதமாகச் சொல்லுகிறாயே. நம்முடைய குழந்தை ரவி இருக்கிறானே. அவனுடைய கவிகளின் இனிமைக்கு இதெல்லாம் ஈடாகுமா? நேற்று ஒரு புதிய கவிதை எழுதினனும் பாஸ்கர பட்டர் சொன்னார். அடாடா! என்ன கவிதை! என்ன அற்புதம்! என்ன சொல்லழகு! என்ன பொருளழகு! என்ன காம்பீர்யம்! என்ன நடை! அடாடா! இந்தக் கவிதையின் அழகை ரஸிக்கும் எனக்கு இந்தப் பால் என்ன! அற்ப வஸ்து. குடித்தவுடன் சுவை முடிந்து போய்விடுகிறது. இந்தக் கவிதை இருக்கிறதே, இது பாடப் பாட மேலும் மேலும் இனிமையாயிருக்கிறது. நீயும் கேட்டுப் பாரேன்'' என்று புதிய கவிதையைத் தம் இனிய குரலால் பாடத் தொடங்கினர்.

சந்தோஷ மிகுதியினல் அவர் குரல் கரகரத்தது. கண்களிலே ஆனந்தக் கண்ணீர் துளித்தது.

கீழே கட்டிலுக்கு அடியிலே ஒளிந்துகொண்டிருந்த மகன், 'அடாடா! இப்படிப்பட்ட தந்தையைக் கொல்ல நினைத்தோமே' என்று எண்ணினன். அவன் இருதயம் படபட வென்று அடித்துக்கொண்டது. மெதுவாய்க் கட்டிலுக்கு அடியிலிருந்து வெளியே வந்தான். தகப்பனுருடைய இரு பாதங்களையும் பற்றிக்கொண்டு, ''அப்பா! என்னை மன்னிக்கவேண்டும். நான் துரோகி, கொலைகாரன்'' என்று கத்தினன்.

அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பிறகு மகன் தான் செய்ய இருந்த கொடுமையான செயலை விவரித்துச் சொன்னன். கட்டிலுக்கு அடியில் வைத்திருந்த குண்டுக் கல்லையும் காட்டினன். தாயார் அப்படியே திகைத்துப்போய்விட்டாள். அவரோ மிகவும் அமைதியாக, ''போனல் போகட்டும், எழுந்திரு, வருந்தாதே'' என்றார்.

மகனுக்கு மிகவும் வெட்கமுண்டாயிற்று. ''என் குற்றத்திற்கு ஏதாவது ஒரு தண்டனை விதியுங்கள்'' என்று மன்றாடினன். அவர் பதிலே பேசவில்லை. அவன் மேன்மேலும் வற்புறுத்

திக் கண்ணீர் விடலானுன். சற்று நேரத்திற்குப் பிறகு, "ஆனுல் சரி, நீ உன் மாமியார் வீட்டில் ஆறு மாதம் வசித்து வா" என்ருர். பையன் தகப்பனுருடைய வார்த்தையின்படி மாமியார் வீட்டிற்குப் போனுன்.

முதலில் ஒரு மாதம் வரையில் உபசாரங்கள், விருந்து, எல்லாம் பலமாய் நடந்தது. பிறகு படிப்படியாய்க் குறைந்தன. மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள், "மாடு மேய்ப்பவன் வரவில்லே. ஆகவே உன் புருஷனே மாடுகளே ஓட்டிப் போகச் சொல்லு" என்று தன் மகளிடம் சொல்லி மாப்பிள்ளேக்கு உத்தரவு போட்டாள் மாமியார்.

மாப்பிள்ளேக் கவிராயருக்கு, தகப்பனுர் தனக்கு விதித்த தண்டனே சரியானதுதான் என்று தோன்றிற்று. மாடுகளே ஓட்டிக் கொண்டு அடுத்துள்ள மலேச்சரிவுக்கும் காடுகளுக்கும் போகலானுன். அந்த அழகிய காட்டிலே இயற்கையழகு நிறைந்த பல இடங்கள் அவனுக்குப் பிடித்திருந்தன. அங்கே தெளிந்த நீர் நிலேகள் பல உண்டு. அங்கேயுள்ள புல் வெளிகளிலே மாடுகளே மேயவிட்டு, அவன் மரத்தடியிலே படுத்துச் சுகமாகத் தூங்குவான்.

இந்த இடத்தின் இனிமையான காட்சிகளேக் கண்டு ரஸித்த அவன் மிகப் பெரிய காவியம் ஒன்று, அற்புதமான கவிதை வடிவமாய் எழுதினுன். அந்தக் காவியத்தின் பெயர் 'கிராதார்ஜுனீயம்.' வேடனுகச் சிவபெருமான் வந்து அர்ச்சுனனுடன் போர் செய்தது கிராதார்ஜுனீயம். இந்த சொல்லுக்கு, வேடனும் அர்ஜுனனும் என்று பொருள். அது அர்ச்சுனன் காட்டிலே வந்து பரமசிவனே வேண்டித் தவம் செய்து பாசுபதம் என்ற அஸ்திரத்தைப் பெற்ற கதை. அதை எழுதிய மகாகவி பாரவி என்பவன்தான் அந்தப் பையன். இந்த அருமையான காவியத்தின் காட்சியை மகாபலிபுரத்திலே சிற்ப வடிவமாகவும் பார்க்கலாம்.

வாத்தியார்: உனக்குத் தெரிந்த இரண்டு நட்சத்திரங்களின் பெயர்களேச் சொல்லு, பார்க்கலாம்.

பையன்: வேண்டாம் சார். அது ஒரு சமயம் தப்பாக இருந்தாலும் இருக்கும்.

வாத்தியார்: பரவாயில்லே; தைரியமாகச் சொல்லு.

பையன்: சினிமா நட்சத்திரம்; நாட்டிய நட்சத்திரம்! - (R. 660)

இந்த விடுமுறை

டி. எஸ். ரகுநாதன்

கடைசி நாள் பரீட்சை நடந்து கொண்டிருந்த பொழுதே, "அப்பாடா, இன்றோடு ஒழிந்தது பரீட்சைத் தொல்லை" என்று எனக்குத் தோன்றிற்று. அன்று சாயங்காலம் முழுவதும் எங்கெல்லாமோ சுற்றினேன்.

வீட்டிற்கு வரும் பொழுது கொஞ்சம் இருட்டி விட்டது. என்னைப் பார்த்ததும் என் தகப்பனார், "என்னடா, ஸ்கூலிலிருந்து கழுதைகளை அவிழ்த்து விட்டு விட்டார்களோ? இருட்டுவதற்கு முன் வீடு வந்து சேரவேண்டாமா?" என்று கத்தினார். ஒரு மாத விடுமுறையை இஷ்டப்படி கழிக்கலாம் என்று இருந்த நான், 'இது என்னடா கஷ்டம்?' என்று நினைத்தேன்.

அடுத்த நாள் காலையில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தேன். "என்னடா கும்பகர்ணன் மாதிரி தூக்கம்? எழுந்திரு. ஏன், ஸ்கூல் இல்லை என்றால் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டாமோ? ம்.. ம்!" என்றார் தகப்பனார்.



காபி சாப்பிட்டுவிட்டு, சட்டை போட்டுக் கொள்வதை அவர் கவனித்துவிட்டார். "எங்கே, சவாரி?" என்று கேட்டார். "ராமு வீட்டில் விளையாடப் போகிறேன்" என்றேன்.

"காலை வேளையிலே ஏதாவது படிக்கக்கூடாதா? தாத்நா இருக்கிறார். போ; சொல்லிக் கொடுப்பார்!" என்றார்.

"லீவுதானே அப்பா!" என்றேன் நான். "லீவு என்றால் புஸ்தகத்திற்குத் தலைமுழுக்கு என்று யார் சொன்னார்கள்? புஸ்தகம் என்றாலே விளக்கெண்ணெய் சாப்பிட்டவன்போல் இருக்கிறது முகம்!" என்றார் அப்பா. நான் அம்மாவிடம் போய், "ராமு வீட்டிலே போய் நான் விளையாடக் கூடாதாம் அப்பா சொல்கிறார்!" என்றேன். அம்மா நல்லவள். "சரி, சரி, போய் விட்டு வேளைக்கு வந்துவிடு" என்றாள். சொன்னதும் ஒரே ஓட்டமாக ஓடி விட்டேன் வெளியே.

ராமு வீட்டில் விளையாடும் பொழுது பொழுதுபோனதே தெரியவில்லை. திடீரென்று அம்மா அங்கே வந்துவிட்டாள். "மணி பன்னிரண்டு ஆகிறது. பசி, தாகம் ஒன்றும் இல்லையா உனக்கு? குளிக்கவேண்டாமா?

நல்ல லீவு வந்ததடா!'' என்று இழுத்துக்கொண்டு போனுள்.

மத்தியான்னம் வெயிலாம். வெளியே போனுல் காலே ஒடித்து விடுவாராம் அப்பா. வீட்டிலே விளையாடினல், ''என்னடா சந்தை இரைச்சல்? குழந்தை தூங்குகிறது. விளையாட்டெல்லாம் வெளியே இருக்கட்டும்'' என்கிருள் அம்மா. ''வேண்டுமானுல் தூங்கு'' என்கிருர் தாத்தா. நான் என்ன சின்ன பாப்பாவா எப்பொழுதும் தூங்க? அப்பாவைக் கேட்டேன்: ''ஏன் அப்பா, அன்றைக்கு டெஸ்ட் மாட்சிலே எல்லோரும் வெயிலிலே தானே விளையாடினுர்கள்?'' என்று. ''அதிகப் பிரசங்கி! உன்னே இனிமேல் எங்கும் அழைத்துச் செல்வதில்லே'' என்கிருர் அப்பா.

சாயங்காலந்தான் கொஞ்சம் நிம்மதியாகத் திரிய முடிகிறது. அதுவும் ராத்திரி வருகிறதே என்று வருத்தமாய் இருக்கிறது. ராத்திரி படிக்க வேண்டுமாம். என்றைக்குத்தான் அப்பா மாதிரி புஸ்தகத் தொல்லே இல்லாமல் ஊர் சுற்றும் நாள் வரப் போகிறதோ?

இதைத் தவிர அம்மா, ''அதை வாங்கிவா, இதைக் கொடுத்து

விட்டுவா'' என்கிருள். தாத்தாவுக்குப் பொடி வாங்கவேண்டும். தங்கை இந்திராவைத் தொட்டிலில் ஆட்டவேண்டும். தம்பி பத்மநாபன் ஒரு ராட்சஸன். அவன் நான் எங்கே போனுலும் பின்னுல் ஓடிவந்துவிடுகிருன். ''போடா வீட்டுக்கு!'' என்ருல் நடு ரோட்டிலே உட்கார்ந்து அடித்தொண்டையால் கத்துகிருன். அம்மா வருவாள். எனக்குத்தான் அடி விழும்.

'அப்பப்பா, இந்த விடுமுறை எப்பொழுது முடியப்போகிறதோ. ஸ்கூல் இருந்தாலே தேவலே!' என்று தோன்றிவிட்டது எனக்கு.

பையன்: இந்த வண்டி எப்போதும் தகர டப்பா மாதிரி சத்தம் போடுமோ?

டிரைவர்: எப்போதும் இல்லே, தம்பி. ஓடும்போது மட்டும்.

—வி. ஏ. எஸ். மூர்த்தி.

பரீட்சை!

எஸ். மீனாட்சி
[கண்ணன் கழகம்]

அண்ணா சொன்னான்:

(தில்லையம்பல ஸ்தலமொன்றிருக்குதாம் - மெட்டு)

பரீட்சை ரிஸல்ட்டு பேப்பர் வந்ததாம் - அதைப்
பார்த்தவுடன் பகீரென்றதாம்
தேடிப்பார்த்தும் நம்பர் இல்லையாம் - அவன்
தேகமெல்லாம் வியர்த்துப் போச்சுதாம்
ஓடிப்போக எண்ணம் தோன்றித்தாம் - ஆனால்
ஓரிடமும் தோன்றவில்லையாம்
அப்பா முகத்தை நினைத்துப் பார்த்தானும் - அவன்
அங்கமெல்லாம் நடுங்கிப் போச்சுதாம்
தென்னந்தோப்பினுள்ளே புகுந்தானும் - அங்கு
தன்னந்தனியாய் தவித்து நின்றானும்.

அப்பா சொன்னார்

(சிதம்பர தரிசனமா - மெட்டு)

பரீட்சையில் பெயிலா நீ -பயலே!
பாடங்கள் படிக்காமல் (பரீட்சை)
பரீட்சையில் தோற்றபின் - பாதகன் நீதான்
பனைமரம் போலேயென் - பார்வையில் நிற்காதே (பரீட்சை)

அம்மா சொன்னாள்

(வரவரக் கெட்டுப்போச்சு - மெட்டு)

வரவரக் கெட்டுப் போச்சு - வீட்டில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்.
பரீட்சையில் பெயிலானான் - தடியன்
பரம்பரைப் பெருமையைக் குலைத்துவிட்டான் (வரவர)

அண்ணா சொன்னான்

(ஐயே மெத்தக் கடினம் - மெட்டு)

ஐயே மெத்தக் கடினம் - இந்தப் பரீட்சை (ஐயே)
கைநிறைய புஸ்தகத்தைக் கரைத்துக் குடித்தும்
தெய்வங்கள் சற்றும் உதவாத இந்தப் பரீட்சை (ஐயே)

அம்பிப் பயல் சொல்கிறான்

(வீரன் இருளன் காட்டேரி - மெட்டு)

நாடு செழிக்கணும் - நல்ல மழை பெய்யணும்
பரீட்சை ஒழியணும் - பசங்கள் மனம் குளிரணும்
எல்லாரும் பாஸ் ஆகணும், எக்களிப்பு உண்டாகணும்
பள்ளிக்கூடம் இருக்கணும்; பரீட்சை மாத்திரம் தொலையணும்!

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(N) 178. நாராயண சர்மா, S., பத்மநாபபுரம். 179. நடராஜன், A., கும்பகோணம். 180. நாராயணன், R., திருநெல்வேலி. 181. நாராயணமூர்த்தி, S., சென்னை-1. 182. நாகராஜன், A., கோயம்புத்தூர். 183. நாகசந்திரன், S., மதுரை. 184. நாகராஜன், சத்தியமூர்த்தி, N., ஆனைமலை. 185. நாராயணதாஸ், S., சீர்காழி. 186. நோபல் பால்ராஜ், A., திருவண்ணாமலை. 187. நாயுடு, M. V., பச்சம். 188. நாகராஜன், K.N., கிருஷ்ணகிரி. 189. நடராஜன், V., சென்னை-4. 190. நாகப்பன், A.T., புதுவயல். 191. நந்தகோபால், S., வடசேரி. 192. நமசிவாயம், K., திருவெண்ணெய்நல்லூர். 193. நவாப்ஜான், A., திருச்சிராப்பள்ளி. 194. நாராயணசாமி, K., சென்னை-21. 195. நாகராஜன், T.S., சென்னை 4. 196. நரசிம்மன், ஜமால், சூடாமணி, C.S., கடலூர். N.T. 197. நாகராஜன், S., நாகர்கோயில். 198. நடராஜன், A.K., ராயபுரம். 199. நாகராஜன், S.P., கோயம்புத்தூர். 200. நாகராஜன், B., சென்னை-20.

(P) 195. பத்மநாபன், A., ஐயனேரி. 196. பத்மநாபன் G., ஜலகண்டபுரம். 197. பால்ராஜன், பாளையங்கோட்டை. 198. பெருமாள், மண்டபம்காம்ப். 199. பிரேம்பியாரன், S., தே-கல்லுப்பட்டி. 200. பழனிசாமி, A., ஆம்பேடி. 201. பரமேஸ்வரன், A., கண்டி, சிலோன். 202. பத்மா, A.P., டில்லி. 203. பால், K.J., கோயம்புத்தூர். 204. பிரேமா, P., வி. சாம்பல்பூர். 205. பத்மாவதி, சௌந்தரவல்லி, ராஜகோபாலன், V., சூலூர். 206, பரமேஸ்வரன், கோபாலகிருஷ்ணன், ஹரிஹரன், C.S., மேட்டூர் டாம். 207. பொன்னம்பலம், A., சிலோன். 208. பிரசன்ன ராவ், V., கிருஷ்ணகிரி. 209. பசுபதி, N.M., ஈரோடு. 210. பத்மநாபன், P.M., திண்டிவனம். 211. பாண்டியன், K., உசிலம்பட்டி. 212. பெருமாள்சாமி, S., கும்பகோணம். 213. பழனிசாமி, S., நெகமம். 214. பத்மநாபன், K., டோமல்கோடு. 215. பழனி, மோகன், M., சென்னை-4.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஜனவரி '52 கூபன் நெ:

216. பச்சையப்பன், K.T., புதுச்சேரி. 217. பெரியண்ணன், T., திருச்சிராப்பள்ளி. 218. பழனியப்பன், M., குழிப்பிறை. 219. பழனியப்பன், A., (விலாசம் எழுதவில்லை.) 220. பொன்னையன். M., திருப்பராய்த்துறை. 221. பார்த்தசாரதி, கண்ணபிரான், K., சென்னை-1. 222. பிரகாசம், K.P., வீரப்பாண்டி. 223. பெருமாள், K., காங்கயம். 224. பிரேமசந்திரன், மிஸ். லக்ஷ்மிதேவி. சுந்தரேசன், சென்னை - 21. 226. பாவுகா, M. I. M., மாவநெல்லா. 227. பத்மா, S.P., சென்னை-17. 228. பழனியப்பன், கண்ணப்பன், சிங்காரம், S., நாட்டரசன் கோட்டை. 229. பழனிசாமி, P. K., பல்லடம். 230. பொன்னையா, ரங்கநாதன், சுப்பிரமணியன், V. T., பாளையங் கோட்டை. 231. பிள்ளை, M. A., முல்லக்கல். 232. பாப்பா, சூடாமணி, P., ஆலப்புழை. 233. பிரபாகர், G. சென்னை-8. 234. பிரேமலீலா, T.R., டில்லி. 235. பார்த்தசாரதி, R., பாப்பநாயக்கன்பேட்டை. 236. புருஷோத்தமன், R. P., சேத்துப்பட்டு. 237. பிரேமசாரன், T.A., திருப்பத்தூர். 238. பிச்சாண்டி, M., திருவண்ணாமலை. 239. பத்மாவதி, R., சீர்காழி. 240. பரமசிவம், சொக்கலிங்கம், S., கொச்சிராச்குளம். 241. பத்மநாபன், V., ஈரோடு. 242. பிரபாவதி, S., கல்கத்தா. 243. பர்வதம், S., செங்கோட்டை. 244. பொன்னம்மாள், தசரத ரமணு, ஜயம்மாள், R., மாஞ்சநல்லூர். 245. பரமேஸ்வரன், A., கண்டி. 246. பிரேமா, G.T., சென்னை-7. 247. பிரபாகரன், D., சென்னை-8.

(R) 209. ராஜலக்ஷ்மி, சுலோசனு, C. R., செங்கல்பட்டு. 210. ராஜலக்ஷ்மி, தனலக்ஷ்மி, ராஜேஸ்வரி, மகேஸ்வரி, சிவநாதன், S., காரவெட்டி. 211. ராமநாதன், S. M., மதுரை. 212. ராஜாமணி, கோபால், கிருஷ்ணன், L., கோயம்புத்தூர். 213. ராஜன், பாலசந்திரன், C. N., திருவனந்தபுரம். 214. ராஜமாணிக்கம், R. கோயம்புத்தூர். 215. ராஜகுமார், R., ராபர்ட்சன் பேட்டை. 216. ராமன், V., விழுப்புரம். 217. ராமகிருஷ்ணராவ், M., கோயில்பட்டி. 219. ரத்தினமாலா, நவநீத கிருஷ்ணன், P., ஆலப்புழை. 220. ராமலிங்கம், ராதாகிருஷ்ணன், M., திருமங்கலம். 221. ரங்கையன், கமலாதேவி, N., நாகப்பட்டினம்.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்
இங்கிலீஷ் 1 - ஆம் தேதி
வெளிவரும்.

உங்கள் சந்தாவை
அனுப்பிவிட்டீர்களா?

★★★★★★★★★★★★★★★★

சின்னஞ்சிறு கதைகள்

'ராமசர்மா'

வெற்றிக்கு வழி

ஓர் இரும்புத் துண்டை உடைப்பதைப்பற்றிப் போட்டி நடந்தது. "ஒரு நொடியில் நான் அதைத் துண்டித்து விடுவேன்" என்று மார் தட்டிற்று கோடரி. ஒவ்வொரு வெட்டாகப் போட்டது. கடைசியில் தன்னுடைய கூர் மழுங்கி உட்கார்ந்துவிட்டது கோடரி. "நான் ஜயித்துவிடுவேன்" என்றது ரம்பம். அதுவும் தன் பற்கள் உடைந்து திரும்பிற்று. அடுத்தபடியாக, "உங்களால் முடியாது என்று எனக்குத் தெரியுமே" என்று பெருமை அடித்துக்கொண்டு வந்தது சம்மட்டி. அது ஒரே அடிதான் போட்டது. உடனே தன் தலை தெறித்து விழுந்தது. கடைசியாக வந்தது நெருப்பு. "நான் முயற்சி செய்து பார்க்கட்டுமா?" என்று கேட்டது அது. நெருப்பைக் கண்டால் மற்றவைகளுக்கு எல்லாம் அலட்சியம். மெதுவாக அது அந்த இரும்புத் துண்டைச் சுற்றி வளைத்துக்கொண்டது. பிறகு அதை இறுக அணைத்துக்கொண்டு கடைசிவரையில் விடவேயில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இரும்பு உருகிக் கசியத் தொடங்கியது. கடைசியில் அது இருந்த உருத் தெரியாமல் உருகி ஓடிவிட்டது. கோபத்துக்கும் அதிகாரத்துக்கும் மசியாத உள்ளம் அன்புக்கு இளகிவிடும் என்பதை நெருப்பு எடுத்துக் காட்டிற்று.

—இங்கிலாந்துக் கதை.

முட்டாள் போட்டி

வாங் என்ற ஒட்டனுக்கு ஒரு சமயம் நூறு ரூபாய் கிடைத்தது. அதை எங்கே மறைத்து வைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. யோசனை செய்து கடைசியில் வீட்டுக்கு வெளியில் சுவரில் ஒரு துவாரம் செய்தான். அதற்குள் அதைப் பதுக்கிவைத்தான். அதன் பிறகும் அவனுக்குப் பயமாயிருந்தது; அதைக் கண்டுபிடித்து யாராவது திருடிவிட்டால் என்ன செய்வது என்று. அதனால் சுவரில் அந்த இடத்துக்கு நேராக, "இந்த இடத்தில் பணம் ஒன்றும் இல்லை; யாரும் சந்தேகப்பட்டு இடிக்கவேண்டாம்" என்று ஒரு பலகையில் எழுதித் தொங்கவிட்டான்.

மறுநாள் காலைக்குள் பணம் போய்விட்டது. அதை எடுத்த சாங் இன்னொரு முட்டாள். தான் திருடியதை யாராவது கண்டு பிடித்துவிட்டால் என்ன செய்வது என்று அவன் பயந்து தன் வீட்டு வாசலில் கீழ்க்கண்ட விளம்பரத்தை எழுதி வைத்தான்: "சாங் என்ற நான் மிகவும் நல்லவன்; வாங்கின் பணத்தை நான் எடுக்கவில்லை."
—சீனக் கதை.

பழைய பஞ்சாங்கம்!

ஒரு சில்லறைக் கடைக்காரனுக்கு வியாபாரத்தில் தினசரி நஷ்டம் ஏற்பட்டு வந்தது. கடைசியில் அவனால் புதிய சரக்குகளை வாங்கி விற்க முடியவில்லை. அதனால் வேறு வழியின்றிக் கடையை மூடிவிடுவது என்று தீர்மானித்தான். அப்போது அவனுடைய மனைவி வந்தாள். ஏராளமான சரக்குகளைக் கொண்டுவந்து கணவனிடம் கொடுத்தாள். அவன் தன் மனைவியை நோக்கி, "இவ்வளவு சரக்குகள் உனக்கு எப்படிக் கிடைத்தன?" என்று கேட்டான். அவள், "அப்போது நீங்கள் வாங்கி வந்த சரக்குகளில் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து நாளடைவில் சேர்த்து வந்தேன்" என்றாள். அவைகளை வைத்துக்கொண்டு அவன் மீண்டும் புதிய வர்த்தகம் செய்யத் தொடங்கினான். அவளுடைய சாமர்த்தியத்தைக் கேட்டு எல்லோரும் புகழ்ந்தார்கள்.

அவர்களுக்கு அந்த வீட்டில் ஒரு பஞ்சாங்கம் விற்கும் கடைக்காரன் இருந்தான். அவனுக்கும் வியாபாரம் மந்தமாகி விட்டது. அவனும் கடையை மூடிவிட நினைத்தான். அப்போது அவனுடைய மனைவி வந்தாள். அண்டை வீட்டுக்காரியைப் போலவே தான் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த பஞ்சாங்கங்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். ஆனால் பழைய வருஷப் பஞ்சாங்கங்களை யார் வாங்குவார்கள்?
—சீனக் கதை

நானும் வருகிறேன்

கணவன் பசியுடன் வீட்டுக்கு வந்தான். மனைவி சமைக்காமல் படுத்திருந்தாள். "இன்னும் சமைக்காமல் படுத்திருக்கிறாயே நான் அப்படியானால் சத்திரத்துக்குப் போகிறேன்" என்றான் அவன் கோபத்துடன். "இரண்டு நொடி இருங்கள்" என்றாள் மனைவி. கணவன் அவள் சாப்பாடு தான் கொண்டுவரப் போகிறாள் என்று நின்றுகொண்டிருந்தான். மனைவி உள்ளே போனாள். வேறு புடைவை உடுத்துக்கொண்டு வந்தாள். "சரி; கிளம்புங்கள். நானும் சத்திரத்துக்கு வருகிறேன்" என்றாள்.
—இந்தியக் கதை.

பொழுது போக்கு

க. திருநாவுக்கரசு

மே. கீ.

1. இதற்கு இரண்டு முள் உண்டு. ஒன்று சோம்பேறி; மற்றொன்று சுறுசுறுப்பு!
2. இதற்குச் சட்டம் போட்டால் சுவரில் மாட்டலாம்.
3. இது எப்போது அடிக்கும் என்று சில பையன்கள் பள்ளிக் கூடத்தில் எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள்.
5. இரும்பைக்கூட இது இரு துண்டாக்கி விடும்.
7. சூரியன் உதிக்கையில் இது மலரும்.
8. ஓலை, கோரை, மூங்கில், பிரம்பு முதலியவற்றில் இதைப் பின்னுவார்கள்.
9. இதைப் படித்தால் மட்டும் போதாது. படித்தவற்றை நினைவிலும் வைத்துக்கொள்ள வேண்டும்.
11. பொறுமையோடு நிறையப் பால் தரும்.

இ. வ.

1. இந்தியாவிலேயே இப்பொழுது இதைக் கட்டுகிறார்கள்.
4. ..இல்லாதவனை மூடம் என்கிறோம்
5. ஆஹா, என்ன அழகான பிராணி இது!
6. கறுப்புக்கு இதை உதாரணமாகச் சொல்லலாம்.
8. ....என்றால் படையும் நடுங்கும்.
10. எஜமான விசுவாசமும் நன்றியும் உள்ளது இது.
12. தண்ணீரில் இருக்கும்போது யானையைவிடப் பலம் பொருந்தியது இது.
13. 'நாடெல்லாம் சுற்றி வரும்; கண்ட தண்ணீர் குடியாது!'
14. ஒரே எழுத்து! எவ்வளவு பொருள்களைத் தாங்குகிறது!
15. இதன் மேல் ஒட்டை லேசில் உடைக்க முடியாது.
16. இதில் மிளகாய் அரைக்கலாம்.

பாலுவின் பரிசு

ஸி. கே. சாந்தா

"டேய், பாலு, என் கைக் கடிகாரத்தை நீ பார்த்தாயா?"

"ஏண்டா, ஏன், தொலைத்து விட்டாயா? நீ பள்ளிக்கூடம் வரும்போது உன் கையில் பார்த்தேனே. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறதே!"

"இப்போ விளையாட்டு மைதானத்தில் 'ஹை ஜம்ப்' விளையாடும் போது கழன்று விழுந்திருக்கும்டா!" மோகனும் பாலுவும் கவலையுடனும் பீதியுடனும் பேசிக் கொள்வதைக் கண்ட மற்றக் குழந்தைகள் அனைவரும் மோகனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

தன் உயிர்த் தோழனான சங்கரனைக் கண்ட மோகன், "டேய் சங்கரா, இன்றைக்கு நான் வீட்டுக்குப் போனதும், எங்க அப்பா கொலை செய்து விடுவார். என்னடா செய்வது?" என்றான்.



"இங்கேயே நின்று உருகினால் வந்துவிடுமா? வா, உடனே விளையாட்டு மைதானத்திலேயே போய்த் தேடிப் பார்க்கலாம். அநேகமாய்க் கிடைத்துவிடும்."

மோகன் பெற்றோருக்கு ஒரே பையன். அவன் மனம் கோணாமல் அவன் கேட்டதை எல்லாம் அவன் தந்தை வாங்கித் தருவார். ஆனால் பத்திரமாக வைத்து ஜாக்கிரதையுடன் உபயோகிக்க வேண்டும் என்றும் கண்டிப்பாகச் சொல்லிவிடுவார்.

அந்த ஊரிலுள்ள ஸ்கூலில், ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான் மோகன். தனக்கு ஒரு கடிகாரம் வேண்டும் என்று வெகு நாள் அடம் பிடித்து ரகளை செய்தான். பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கண்டிப்பாக எச்சரித்து விட்டு, கடைசியில் நல்ல கடிகாரம் ஒன்று வாங்கித் தந்தார்.

மோகனையும் சங்கரனையும் தவிர மற்ற யாவரும் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். பியூன் முனியாண்டி, பள்ளிக்கூடக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, காம்பவுண்டு கேட்டையும் பூட்டும் சமயம். "முனியாண்டீ, முனியாண்டீ!" என்ற ஒரு சிறுவனின் குரலைக் கேட்டு அவன் தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்தான்.

மோகனும் சங்கரனும் வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்தார்கள்.

"என்ன குழந்தைகளா! இம் புட்டு நேரம் வீட்டுக்குப் போவாதே என்னு பண்ணிகிட்டு இருக்கீங்க?" என்று கேட்டவாறே கேட்டை இழுத்துப் பூட்டினன்.

கடிகாரம் கிடைக்காமல் வெறுங்கையுடன் வீடு திரும்பும் இவ்விரு தோழர்களும் பியூன் முனியாண்டியின் கேள்விக்குப் பதில் அளிக்காமல் மௌனமாக வீட்டை நோக்கி நடந்தார்கள்.

சங்கரனின் வீட்டைக் கடந்து சிறிது தூரத்தில் மோகனின் வீடு இருந்தது. தன் வீட்டை நெருங்கிய சங்கரன், "மோகன், நாளைக் காலை சற்று முன்பாகவே வந்துவிடு. எல்லாருக்கும் முன்னல் நாம் போய்த் தேடினல் அகப்பட்டுவிடும்" என்ருன்.

"அப்பா கேட்டாரானல் என்னடா பதில் சொல்வது? நாளைக்காவது கிடைக்குமோ, இல்லையோ!"

"கவலைப்படாதே மோகன். கழற்றிப் பெட்டியில் வைத்திருப்பதாகச் சொல். நம் முயற்சி வீண் ஆகாது. நாளைக்கு நிச்சயம் கிடைத்துவிடும்" என்று தேறுதல் கூறிவிட்டுச் சங்கரன் வீட்டுக்குச் சென்ருன்.

மோகனுக்குத் தன் வீடு நெருங்க நெருங்க, பயம் அதிகரித்தது. தன் தகப்பனர் கையில் பிரம்புடன் வாசற்படியில் நிற்பதைப் போன்ற பிரமை உண்டாயிற்று. பசியினலும் பயத்தாலும் மிகவும் களைப்புடன் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

மோகனின் வகுப்பு மாணவனன பாலு படிப்பில் மிகவும் சமர்த்தன். ஒவ்வொரு வகுப்பிலும் எல்லாவற்றிலும் பாலுதான் முதலில் பாஸ் செய்வான்.

ஆனல் பாவம் ஏழை. மோகனின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் பாலுவும் அவன் பெற்ருேர்களும் வசித்தார்கள். மோகனின் கைக்கடிகாரத்தைப் பார்த்த பாலுவுக்குத் தனக்கும் ஒரு கடிகாரம் வேண்டும் என்னும் ஆவல் அதிகரித்தது. அன்றிரவு சாப்பிடும் பொழுது அவன் தாயாரிடம் மெதுவாகத் தன் கோரிக்கையைத் தெரிவித்தான்.

"ஏண்டா பாலு, அவன் அப்பா இருநூறு ரூபாய் சம்பாதிப்பவர். அதோடு அவர்கள் பணக்காரர்கள். அதற்கும் உன் தகப்பனர் சம்பாதித்துக்கொண்டு வரும் அறுபது ரூபாய்க்கும் வித்தியாசம் இல்லையா? நீ ஆயுசுடன் நன்ருக, நிறையப் படித்தாயானல், நீ பெரியவனன பிறகு நிறையச் சம்பாதித்து, உனக்கு வேண்டியதை வாங்கிக் கொள்வாய்!" என்ருள்.

'பள்ளிக்கூடத்தில் எல்லாரிடமும் படிப்பிலும் குணத்திலும் நல்ல பிள்ளை என்ற பெயருடன் விளங்கும் எனக்கு என் பெற்ருேர்கள் ஒன்றுமே வாங்கித் தருவதில்லை' என்ற சிந்தனையினல் உற்சாகமிழந்து காணப்பட்டான் பாலு.

அன்று மோகன், பாலு இருவரும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் பொழுது, "மோகன், உன் கைக்கடிகாரம் பார்க்க மிகவும் அழகாக இருக்கிறது. இதன் விலை என்னடா?" என்று பாலு ஆவலுடன் கேட்டான்.

மோகனுக்கு எல்லையற்ற உற்சாகம் ஏற்பட்டது. பாலுவின் பின்புறம் சென்று அவனுடைய இரு

புஜத்திலும் தன் கைகளை ஊன்றி ஒரு முறை எகிறிக் குதித்தான். பிறகு, "பாலு, இதன் விலையை ஏன் கேட்டாய்? நீயும் வாங்கிக் கொள்ளப் போகிறாயா?" என்றான்.

"ஆம்" என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் பாலு.

"இந்தக் கடிகாரத்தின் விலை அறுபது ரூபாயாம். இந்த வருஷம் பரீக்ஷையில் நான் முதலில் பாஸ் செய்தால், அப்பா ஒரு சைகிள் வாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்" என்றான்.

பாலு பதில் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே நடந்துகொண்டிருந்தான். ஆனால் மோகன் உற்சாகத்தில் சிறிது தூரம் குதித்து ஓடுவதும், "ஏண்டா பாலு, சற்று வேகமாக நடந்து வாடா" என்று அழைப்பதுமாக இருவரும் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தார்கள்.

அன்று உபாத்தியாயர் மாணவர்களிடம், "டேய் பசங்களா! இங்கிருக்கும் வேறு பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் நம் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் விளையாட்டுப் பந்தயங்கள் வைக்கப்போகிறோம். அதனால் இன்றையிலிருந்து வகுப்பு முடிந்தவுடன் நான் கற்றுக் கொடுக்கும் விளையாட்டுக்களை ஒவ்வொருவனும், நாள் தவறாமல் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

அன்று பாலு விளையாடிவிட்டுத் திரும்புகையில், ஹை ஜம்ப் விளையாடிய இடத்திற்கு வந்ததும் சட்டென்று குனிந்து அந்த மணலிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்தான்.

தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்தவாறே பரபரப்புடன் இடுப்பில் செருகிக்கொண்டான்.

அன்று பாலு மற்ற எல்லோருக்கும் முன் வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டான். ஆனால் ஏனோ அவன் மனம் மிகவும் கலவரமடைந்திருந்தது. யாரோ தன்னைத் துரத்தி வருவதைப் போன்ற பிரமையுடன் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே நடந்தான். பயத்தால் கைகால்கள் உதறலெடுத்தன. 'நான் ஏன் அதை எடுத்துக்கொண்டேன்? என்னிடம் இருப்பதைக் கண்டுபிடித்து விட்டார்களானால் என்னைத் திருடன் என்று ஏசிப் பரிகசிப்பார்களே! அதைவிட அவமானம் வேறு என்ன இருக்கிறது? நம் பெற்றோர்கள் இதை எங்கிருந்து கொண்டு வந்தாய் என்றால் என்ன பதில் சொல்வது? இப்படிப் பட்ட சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோமே. என்னிடம் அகப்பட்டது என்று உபாத்தியாயரிடம் கொடுத்திருந்தால் எவ்வளவு பெருமையுடனும் குதூகலமாகவும் இருக்கலாம்!'

இந்தச் சிந்தனைகளுடன் சோர்ந்து களைப்புடன் வீடு வந்து சேர்ந்தான் பாலு. தன் பள்ளிக்கூட உடுப்புக்களைக் கழற்றும் போது, இடுப்பில் செருகிய பண்டம் பத்திரமாய் இருக்கிறதா என்று பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான்.

'நான் எவ்வளவு ஜாக்கிரதையுடன் அதை எடுத்துக்கொண்டு வந்தேன்? எங்கேயோ தவறிப் போய்விட்டதே. எனக்கும் என் நண்பனுக்கும் இல்லாமல் போய்விட்டது. வழியில் எங்காவது விழுந்திருந்தால், இதற்குள் யாரிடமாவது அகப்பட்டிருக்கும்! நான் என் நண்பனை ஏமாற்றித் துரோகம் செய்ததால் பகவான் என்னிடமிருந்தும் அதைப் பறித்து

விட்டார்' என்று எண்ணியதும், துக்கம் தாங்கமுடியாமல் மௌனமாகக் கண்ணீர் வடித்தான். சுவாமி படத்தின்முன் மண்டியிட்டு உட்கார்ந்து, "பகவானே, இனிமேல் என் மனம் அறிந்து தூர்நடத்தையில் இறங்க மாட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று வேண்டிக்கொண்டான்.

மோகனுடைய மனசு கலவரமடைந்திருந்தது. 'நான் எப்படி வீட்டுக்குப் போவது? அப்பா கோபித்துக்கொள்வதுடன், நன்ருக அடித்துவிடுவார். உடம்பு தடித்துவிடுமே!' என்று நினைத்ததும் அவன் முதுகு வலிப்பதைப் போன்ற பிரமை ஏற்பட்டது.

'நாளைக் காலை எனக்கும் முன்னுல் யாராவது பள்ளிக்கூடம் போனால் அவர்கள் கையில் அகப்பட்டுவிடும். இனிமேல் ஏதாவது வேண்டும் என்று அப்பாவைக் கேட்டால் உதைதான் விழும்.'

இவ்வித எண்ணங்களால் தன்னை மறந்து, பாதை ஓரமாகச் சென்றுகொண்டிருந்த மோகன் வழுக்கி விழுந்துவிட்டான். அந்த வழியே சென்றுகொண்டிருந்த ஒருவர், "என்ன தம்பீ, கீழே பார்த்துப் போகாமல் வாழைப் பழத் தோலின்மேல் காலை வைத்து, வழுக்கி விழுந்துவிட்டாயே" என்ருர்.

பாவம், மோகன் கால் சுளுக்கிக்கொண்டது. தன் உடைகளில் பட்ட அழுக்கைத் தட்டிக்கொண்டே, அவன் விழுந்த இடத்தைப் பார்த்தான். உடனே அவன் கால்வலி, உடல்வலி, பயம் எல்லாம் பறந்தோடிவிட்டன. மிகுந்த ஆவலுடனும் பரபரப்புடனும் அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு ஓடினன்.

அவன் தந்தை, "ஏண்டா, காலில் என்ன?" என்று கேட்டதற்கு, "எங்கள் பள்ளிக்கூடத்திற்கும் வேருெரு பள்ளிக்கூடத்திற்கும் விளையாட்டுப் பந்தயங்கள் வைக்கப் போகிருர்கள். அதற்காக ஹைஜம்ப் விளையாடினேன். கால் சுளுக்கிக்கொண்டது" என்ருன்.

மறுநாள் பாலு, 'பாவம், மோகன் வீட்டில் அடியும் வசவும் வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடம் வராமல் மட்டம் போட்டிருப்பான்' என்று எண்ணியவாறே வகுப்பிற்குள் பிரவேசித்தான். அங்கே மோகன் குதூகலமாகத் தன் நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டிருந்தான்.

பாலு அவனை அணுகி, "மோகன், உன் கடிகாரம் கிடைத்ததா?" என்று விசாரித்தவாறே தன் தோழனின் கையை உற்றுப் பார்த்தான்.

"ஓ, நேற்று மாலை நான் வீடு திரும்பும் பொழுது, வழியில் கிடந்தது, இந்தக் கடிகாரம். அங்கே எப்படிப் போச்சு என்றுதான் எனக்கு விளங்கவில்லை!" என்றான்.

"நல்லது. வேறு யாருக்கும் அகப்படாமல் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிட்டது. ரொம்ப சந்தோஷம்" என்று திருப்தியுடன் பதிலளித்தான் பாலு.

ஒரு வாரத்திற்குப் பிறகு: அன்றுதான் விளையாட்டுப் பந்தயங்கள் நடக்கப்போகின்றன. மைதானத்தில் ஏகக் கூட்டம். லாங்ஜம்ப், ஹைஜம்ப், ஸ்கிப்பிங், பந்து விளையாடுதல், ஓட்டப் பந்தயம் எல்லாம் முறைப்படி நடந்தன.

ஆனால் ஓட்டப் பந்தயத்தில் பாலு ஒருவனே ஜயித்தான். ஜனக்கூட்டத்தின் முன் தலைமை உபாத்தியாயர் எழுந்து நின்று, "சிரஞ்சீவி பாலுவுக்கு இங்கே கூடி இருப்போரின் சார்பாகவும், என் சார்பாகவும் முழு மனத்துடனும் ஆசீர்வதித்து, ஓட்டப் பந்தயத்தின் பரிசாக, இந்தக் கடிகாரத்தை வழங்குகிறேன்" என்றதும், கூட்டத்தினிடையே எழுந்த கரகோஷத்திற்கு உரியவனான பாலு, எல்லார் முன்னிலையில் சிரித்த முகத்துடன் ஓர் வீரனைப்போல் சென்று பரிசைப் பெற்றுக்கொண்டான்.

தன் கோரிக்கை நிறைவேறிய குதூகலத்தினால் பாலு, "இனி நான் எப்பொழுதும் உண்மையுடன் நடந்துகொள்வேன்" என்று பிரதிக்ஞை செய்துகொண்டான்.

சாமர்த்தியமுள்ள ஆட்டுக் குட்டி

ஓர் ஆட்டுக்குட்டி தனிமையில் உல்லாசமாகத் திரிந்து மேய்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது அவ்வழியே சென்ற ஓநாய் ஒன்று அதைப் பிடித்துக்கொண்டது. தனக்கு நல்ல இரை கிடைத்துவிட்டது என்று அது சந்தோஷப்பட்டது. ஆட்டுக்குட்டி தப்ப வழி ஏதும் அறியாமல் ஒரு கணம் திகைத்தது. பிறகு ஓநாயைப் பார்த்து, "என்னுடைய வாழ்நாள் மிகக் குறுகியதாயிருந்தாலும் நான் கடைசிக் காலத்தில் சந்தோஷமாகவாவது இறக்கிறேன். நீ கொஞ்ச நேரம் ஊது; நான் ஆடுகிறேன்" என்ன கெஞ்சிக் கேட்டது.

உடனே ஓநாயும் சரியென்று ஊத, ஆட்டுக்குட்டி ஆடத் தொடங்கியது. "இன்னும் பலமாக ஊது! இன்னும் பலமாக ஊது!" என்றது ஆட்டுக் குட்டி. ஓநாய்க்கு இரை கிடைத்த சந்தோஷம். மூச்சைப் பிடித்துக்கொண்டு பலமாக ஊதியது. துரதிருஷ்ட வசமாகப் பக்கத்தில் இருந்த வேட்டை நாய்கள் இந்தச் சப்தத்தைக் கேட்டு அங்கே ஓடி வந்தன. ஆட்டுக் குட்டி அதைத்தானே எதிர்பார்த்தது! வேட்டை நாய்கள் வருவதை ஓநாய் பார்த்ததோ இல்லையோ, அவ்வளவுதான், தலை கால் தெரியாமல் ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று எண்ணியவாறே வயிறு வலிக்க ஓடியது. ஆட்டுக் குட்டியோ பிழைத்தது புனர்ஜன்மம் என்று வேட்டை நாய்களோடு திரும்ப வந்து சேர்ந்தது.

—ஈசாப் கதை.

டெலிபோன்

புரோபஸர் விஞ்ஞானம்




6
இந்தக் கம்பிகளின் வழியா
கத்தான் மின்சார ஓட்டம்
என் வீட்டிலிருந்து என்
நண்பன் வீட்டு டெலிபோ
னுக்குச் செல்கிறது.
போக்குவரத்துக்கு இடை
ஞ்சல் இல்லாதபடி உயரத்
தில் கம்பங்களில்கம்பிகளை
போட்டிருக்கிறார்கள். மின்
சாரம் கம்பத்தில்பாயாதபடி
பீங்கான் குழாய்களில்கம்பி
களைச் சுற்றியிருக்கிறார்கள்
இதுதான் நீ பார்க்கும் டெலிபோன்
யந்திரம். இதன் மூலம்தான் என்
நண்பரை அழைத்துப் பேசமுடியும்
டெலிபோன் யந்திரம் உள்ள எவரி
டமும் பேசமுடியும்.
7
8
சரி; நீங்கள் பேசப்போகிறீர்கள் என்பது அவர்களுக்கு
எப்படித் தெரியும்?
அவர்கள் பேசப்போகிறார்கள் என்று உங்களுக்கு
எப்படித் தெரியும்?
சரியான கேள்விகள்! டெலிபோன்
யந்திரத்தைக் கவனி. அதில் 0 முதல் 9 வரை
எண்கள் எழுதிய டயல் இருக்கிறது. என்
நண்பருடைய டெலிபோன் நம்பர் எனக்குத் தெரியும்.
அவருடைய நம்பர் 84103. 8, 4, 1, 0, 3, என்ற
எண்களை ஒவ்வொன்றாகச் சுற்றுவேன். அப்போது
அவர் வீட்டு டெலிபோனில் மணி அடிக்கும். அவர்
யாரோ பேசக் கூப்பிடுகிறார்கள் என்று வருவார்;
பேசுவார். அதுபோலவேதான் என்னைக்
கூப்பிட்டாலும் இந்த டெலிபோன் மணி அடிக்கும்.
நான் போய்க் கேட்பேன். இதற்கு ஆடோமாடிக்
டெலிபோன் என்று பெயர்.
9
டெலிபோனை முதலில்
கண்டுபிடித்தவர்யார்,
ஸார்?
10
இதை பெல் என்பவர்
முதலில்கண்டுபிடித்தா
ர் அவரைப்பற்றிக்
கொஞ்சம் சொல்கிறேன்
கேளுங்கள்.



பெல் ஸ்காட்லாந்தில் பிறந்தவர். அவர் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கே செவிட்டு ஊமையர்களுக்குக் கல்வி புகட்டி வந்தார். மனிதர் காதிலுள்ள சவ்வைப் போல் இரண்டு மெல்லிய தகடுகளைச் செய்தார். அவைகளை மின்சாரம் ஓடும் கம்பியால் இணைத்தார். பலவிதமாகச் சோதனை நடத்தி வந்தார்.

பெல் மாடியில் டெலிபோன் சோதனைகளை நடத்தி வந்தார். ஒரு நாள் அவருடைய வேலைக்காரன் மூன்று படிக்கட்டு ஏறி, அங்கே ஓடி வந்தான். "நீங்கள் பேசியது கீழே கேட்கிறது! ஒவ்வொரு சொல்லும் கேட்கிறது! 'வாட்ஸன், இங்கே வா. காரியம் இருக்கிறது' என்றீர்கள்" என்றான்.

இப்படித் தொடங்கி வளர்ந்தது டெலிபோன்.

பல விஞ்ஞானிகள் கண்டு பிடித்த விஷயங்களை வைத்துக் கொண்டு பெல் டெலிபோனை அமைத்தார். மின்சாரத்துக்கும் காந்தத்துக்கும் சம்பந்தம் உண்டு என்று தெரிவித்தவர் எர்ஸ்டெடு. மின் - காந்தத்தை அமைக்க வழி காட்டியவர் ஆம்பேர். சிறந்த மின் - காந்தங்களை அமைத்தவர் ஸ்டர்ஜன். டிரான்ஸ்மிட்டரைத் திருத்தமாக அமைத்தவர் ஹ்யூஸ்.

பெல் டெலிபோனைக் கண்டுபிடித்து இரண்டு மாதம் ஆனதும் அமெரிக்காவில் ஒரு கண்காட்சி நடந்தது. அதில் தம்முடைய டெலிபோனை வைக்கவேண்டும் என்று பெல் ஆசைப்பட்டார். அவருடைய பணம் எல்லாம் சோதனைகளில் செலவழிந்துவிட்டது, கண்காட்சி நடக்கும் ஊருக்குப் போவதற்குக் கூட அவர் கையில் பணம் இல்லை. எப்படியோ முயன்று, எத்தனையோ பாடுபட்டு ஆதைக் கல்விப் பகுதி





யில் வைக்க அநுமதி கிடைத்தது.

பிரேஸில் நாட்டு அரசர் ஒரு நாள் தற்செயலாக பெல் இருந்த பகுதிக்கு வந்தார்.

"என்ன புரொபஸர், இங்கே என்ன வைத்திருக்கிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே நெருங்கினார்.

பெல் தம் டெலிபோனைப் பற்றி அரசரிடம் விளக்கமாகச் சொன்னார். அரசருக்கு நம்பிக்கை இல்லை. அப்போது அரசருடைய கையில் பெல் ரீஸிவரைக் கொடுத்தார். சற்றே ஒதுங்கிப் போய் டிரான்ஸ்மிட்டரில் மெதுவாகப் பேசினார்.

அப்போது அரசர், "என்ன அதிசயம்! இது பேசுகிறதே!"



என்றார். அங்குள்ளவர்களும் டெலிபோனில் பேசிக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சி அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளி வந்தது. பெல் புகழ்பெற்றார். டெலிபோன் உலகம் எங்கும் பரவத் தொடங்கிற்று.

(1) பெல் முதல் முதலாக அமைத்த டெலிபோன். (2,3,4) பழங்கால டெலிபோன் கருவிகள். (5) இப்போதுள்ளது.



நாம் சென்னையிலிருந்தபடி டில்லி, கல்கத்தா, பம்பாய், திருச்சி முதலிய எந்த நகரத்திலும் உள்ள நம் நண்பரோடு பேச முடியும். இதற்கு டிரங்கு டெலிபோன் என்று பெயர்.

விதியின் விளையாட்டு

எச். அன்னபூரணா

க. கழகம் (A. 3:4)

தமிழ் நாட்டில் குமரிமுனையை அடுத்த, சுசீந்திரம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரில் ஆதிநாராயணர் என்று ஒருவர் இருந்தார். அவர் தம் மனைவி சுசீலாவுடனும் குழந்தையுடனும் வாழ்க்கை நடத்திவந்தார். அவருக்கு வருமானம் ஏதும் இல்லாததால், தினமும் காலையில் எழுந்து ஸ்நானம் முதலியவைகளைச் செய்து முடித்த பின்பு, கடவுளை வணங்கி உஞ்சவிருத்தி செய்யப் புறப்படுவது வழக்கம். உஞ்சவிருத்தியில் தமக்குக் கிடைக்கும் அரிசியைக் கொண்டு தம் குடும்பத்தைப் போஷித்து வந்தார்.

ஒரு நாள் அவர் வழக்கப்படி ஒரு கிராமத்திற்கு உஞ்சவிருத்திக்குப் போயிருந்தார். திரும்பி வரும் வழியில் சில நன்செய் நிலங்களைத் தாண்டி வரவேண்டியிருந்தது. மழைபெய்து வரப்புகள் நனைந்து வழுக்கலாக இருந்தன. விரைவாக நடந்து வந்த ஆதிநாராயணர் ஒரு வரப்பிலிருந்து மற்றொரு வரப்புக்குத் தாவும்பொழுது அருகிலிருந்த கல் இடறி, பண்படுத்தி நடவுசெய்திருந்த சழனியில் அரிசியுடன் விழுந்துவிட்டார். அரிசி முழுவதும் சேற்றில் விழுந்துவிட்டது.

"ஐயோ! இனி நான் என்ன செய்வேன்" என்று அரற்றினார். "நான் வெறுங்கையுடன் வீடு செல்வதில் பயனில்லை. பசிப் பிணியால் வாடும் மனைவியையும் குழந்தையையும் பார்க்க மனம் பொறுக்காது. நான் காட்டின் வழியே செல்வதுதான் தகுதி" என்று எண்ணி, காட்டு வழியே செல்லலானார்.

பொழுது புலரும் நேரமாயிற்று. களைப்புடன் நடந்து வந்த ஆதிநாராயணர் தாகவிடாய் கொண்டு, தண்ணீர் எங்கேயாவது கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தார். சற்றுத் தொலைவில் ஒரு கிணறு அவர் கண்ணுக்குத் தென்படவே, அதை நோக்கி விரைந்து நடந்து சென்றார்.

அந்தக் கிணற்றில் அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது. அதில் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. அதில் ஒரு சிங்கமும் ஒரு நாகப்பாம்பும் ஓர் ஆசாரியும் இருப்பதைக் கண்டார். சிங்கம் தண்ணீரில் நின்றுகொண்டிருந்தது. நாகப்பாம்பு ஒரு வேரில் சுற்றிக்கொண்டு இருந்தது. ஆசாரி கிணற்றின் நடுவில் இருந்த ஒரு கல்லை ஆதாரவாகக் கொண்டு தொங்கிக்கொண்டிருந்தான்.

அப்போது ஆசாரி அவரைப் பார்த்து, "ஐயா, இரவில் இந்த வழியே வந்தவன் கிணறு இருப்பதை அறியாமல், இதனுள் விழுந்துவிட்டேன். என்னை நீங்கள் காப்பாற்றினால் உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. என்னால் செய்யக்கூடிய பிரதி உபகாரத்தையும் உங்களுக்குச் செய்கிறேன்" என்று நயந்து கூறினான்.

ஆதிநாராயணர் இரக்கங் கொண்டு ஆசாரியைக் கரையேற்றத் துணிந்தபொழுது சிங்கராஜா, “ஐயா! அவனை நம்பவேண்டாம். நான்தான் கிணற்றில் முதலில் விழுந்தேன். ஆகையால் என்னை முதலில் வெளியே எடுத்துவிட்டால் உமக்குத் தகுந்த உபகாரம் என்னால் செய்ய முடியும்” என்று கூறிற்று.

ஆதிநாராயணர் சற்று யோசித்துக்கொண்டிருந்தபோது, நாகப்பாம்பு சொல்லிற்று: “ஐயா, நானும் உங்களைப் போலச் சத்தியம் பேசுகிறவன். சத்தியத்தை மீறி ஒருவரையும் துன்புறுத்த மாட்டேன். என்னையும் நீங்கள் வெளியே எடுத்துவிட வேண்டும். நான் உங்களுக்குத் தகுந்த சமயத்தில் வந்து உதவுவேன்.”

ஆதிநாராயணர் தம்மிடம் இருந்த ஒரு நீண்ட கயிற்றினால் ஒவ்வொன்றாக வெளியே எடுத்து மூன்று உயிர்களையும் கரையில் நிறுத்தினார்.

அப்போது சிங்கம் மறுபடியும் அவரைப் பார்த்து, “ஐயா! இந்த ஆசாரியை நம்பவேண்டாம். நீங்கள் சற்று இந்த மரத்தடியில் இளைப்பாறுங்கள். நான் இதோ ஒரு நொடியில் உங்களுக்கு ஒரு பரிசில் கொண்டுவருகிறேன்” என்று கூறிக் காட்டுக்குள் நுழைந்தது. நாகப்பாம்பு அவரைப் பார்த்து, “ஐயா, நீர் என்னை எந்த நேரத்தில் எந்த இடத்தில் நினைத்தாலும் நான் வந்து உமக்கு உதவி செய்கிறேன்” என்று கூறி ஊர்ந்து சென்றது.

கொஞ்சநேரம் சென்றது. சிங்கம் ஓர் அரசகுமாரனின் கிரீடம் ஒன்றை, ஆதிநாராயணர் பாதத்தில் வைத்து அதைப் பெற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய்க் கேட்டுக்கொண்டது. அவர் அதை அன்புடன் ஏற்றுக்கொண்டு ஆசாரியுடன் புறப்பட்டார். அவரும் ஆசாரியும் பேசிக்கொண்டே மாலை நேரத்தில் பக்கத்திலுள்ள சௌந்தரபாண்டியன் பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

சௌந்தரபாண்டியன் என்ற அரசன் அங்கே ஆண்டு வந்தான். அவனுக்கு அதிசூரன் என்ற பெயருள்ள ஒரு குமாரனும், பத்மாசனி என்ற பெயருள்ள ஒரு குமாரியும் இருந்தார்கள்.

ஒரு நாள் அதிசூரன் காட்டிற்கு வேட்டையாடத் தன் குதிரைமேல் சென்றான். அப்போது ஆதிநாராயணரால் விடுவிக்கப்பட்ட சிங்கம் அவன்மீது பாய்ந்து அவனைக் கொன்று புசித்துவிட்டுக் கிரீடத்தையும் எடுத்துக் கொடுத்துவிட்டுச் சென்றது. இளவரசன் மாண்ட விவரத்தைச் சில தூதவர்கள் சௌந்தரபாண்டியனுக்கு அறிவித்தார்கள்.

சௌந்தரபாண்டியன் மிகவும் வருந்தி அரசகிரீடம் பறிபோனது பற்றியும், தன் அருமைப் புதல்வன் இறந்து போனதுபற்றியும் பிரலா

பித்தான். பின் ஒருவாறு மனம் தேறி, "சிங்கம் எடுத்துச் சென்ற அரச கிரீடத்தை யார் கொண்டு வந்து என்னிடம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு என் நாட்டை முடிசூட்டி, அரசனாக்கி என் குமாரி பத்மாசனியையும் திருமணம் செய்து வைக்கிறேன்" என்று பிரகடனப்படுத்தினான்.

ஆசாரி, ஆதிநாராயணருடன் தன் வீட்டுக்குச் சென்றான். ஆசாரி தன் மனைவியிடமிருந்து அரசனுடைய பிரகடனத்தைப் பற்றி எல்லாம் தெரிந்துகொண்டான். உடனே ஆசாரியின் கருத்து மாறிவிட்டது. எப்படியும் ஆதிநாராயணரிடம் இருக்கும் அந்தக் கிரீடத்தை அபகரித்து அரசனிடம் கொடுத்துத் தான் அரச குமாரியை மணந்து நாட்டுக்கு அரசனாகவும் எண்ணினான். அதற்கான யோசனைகளை ஒரு வழியாக ஆலோசித்து, ஆதிநாராயணருக்கு வேண்டிய வசதிகள் செய்வது போல் பாவனை செய்தான். தாழ்வாரத்தில் இருந்த ஒரு சிறிய அறையில் அவரைத் தங்கும்படி கேட்டுக்கொண்டான்.

அவரும் கபடு, சூது அறியாமல் தாம் கொண்டு வந்த கிரீடத்தைக் கீழே வைத்துவிட்டு அவ்வறையைப் பார்க்கச் சென்றார். இதுதான் தக்க சமயம் என்று எண்ணி ஆசாரி அவரை அவ்வறையினுள் தள்ளிக் கதவை நன்றாகப் பூட்டிவிட்டான். பின்பு அவன் கிரீடத்தை எடுத்துக்கொண்டு அரச சபைக்கு விரைந்து சென்றான். ஆதிநாராயணர் அவ்வறையில் அடைபட்டு, சிங்கம் கூறியது உண்மையானது பற்றி எண்ணிக்கொண்டிருந்தார்.

ஆசாரி அரச குமாரியை மணப்பது அவன் மனைவிக்குப் பொறுக்குமா? மேலும் அவள் சற்று இரக்க குணமுடையவள். அவர் அடைபட்டிருந்த, அறைக் கதவருகில் வந்து அவரை அழைத்துக் கதவிலுள்ள ஒரு துவாரத்தின் வழியாக, ஒரு மூங்கில் குழாயைச் செலுத்தி, அவர் அருந்துவதற்குக் கொஞ்சம் பால் வார்த்து

வந்தாள். அவரும் கிடைத்ததை உண்டு வந்தார்.

இப்படி இருக்கையில் ஆசாரி அரச சபையில் கிரீடத்தை அரசனுக்குக் காட்டித் தனக்கு முடி சூட்டவும், அரச குமாரியைத் திருமணம் செய்து வைக்கவும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அரசனும் தன் சொல் தவருமல் ஆசாரிக்குத் தன் குமாரியைத் திருமணம் செய்து கொடுக்கவும், தன் நாட்டை முடிசூட்டி வைக்கவும் இசைந்தான். உடனே மந்திரிகளும் பிரதானிகளும், முடி சூட்டு விழாவுக்கும் திருமணவிழாவுக்கும் வேண்டிய முயற்சிகள் செய்யலானார்கள்.

அறையில் அடைபட்ட ஆதி நாராயணர் தாம் முன்னிருந்த நிலைமையையும் காட்டில் கிணற்றருகில் பிராணிகள் கூறிய எச்சரிக்கையான சொற்களையும் நினைந்து வருந்தினர். நாகப்பாம்பு சொன்ன வார்த்தைகள் ஞாபகத்திற்கு வரவே, அதை நினைத்து நாகராஜாவைத் துதி செய்ய ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் அவ்வறையினுள் நாகராஜன் நுழைவதைக் கண்டு அதை வரவேற்ருர். நாகராஜனிடம் நடந்த விஷயங்கள் அனைத்தையும் கூறினர். தம்மை ஆசாரி ஏமாற்றியதையும் விளக்கிக் கூறினர். இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு ஏதாவது உதவி செய்யும்படியும் வணங்கிக் கேட்டார்.

நாகப்பாம்பு அவரை நோக்கி, "ஐயா, நான் இன்று இரவில் அரசகுமாரி சயனிக்கும் அறையில் சென்று அவளைத் தீண்டுகிறேன். அரசகுமாரி மயங்கி இறந்தவள் போலாவாள். அதனல் அரசன் அவளுடைய திருமணக் காரியங்களை நிறுத்தித் தன் குமாரியின் சிகிச்சைக்கு உடன்படுவான். பல மாந்திரிகர், வைத்தியர்களை வரவழைப்பான். அவர்கள் செய்யும் சிகிச்சைகளில் பலன் ஏதும் காணுது. நகர் எல்லாம் பறை சாற்றி மாந்திரிகர்களையும் வைத்தியர்களையும் அழைப்பான். அப்பொழுது நீர் இந்த அறையினின்றும் வெளியே வந்து, அரசகுமாரி இருக்குமிடம் சென்று வேப்பிலையும் பாலும் வைத்து விஷத்தை இறக்குங்கள். நான் வந்து விஷத்தை எடுத்துவிட்டு உம்மையும் பெருமைப் படுத்துகிறேன். கவலைவேண்டாம்" என்றது.

ஆதிநாராயணர் மகிழ்வு கொண்டு அதை வணங்கிஞர். நாகப்பாம்பு அன்று இரவே அரசகுமாரியைத் தீண்டிவிட்டது. அரசகுமாரி விஷம் தலைக்கேறி மயங்கி 'ஓ'வென்று அலறிப் புடைத்துக் கீழே விழுந்தாள். நாகம் விரைந்து செல்வதைக் கண்டார்கள் தாதியர். உடனே நிகழ்ந்த செய்தியைத் தம் அரசனுக்கு அறிவிக்க விரைந்தனர்.

தன் மகளைப் பாம்பு தீண்டிவிட்டது என்பதைக் கேட்டதும் அரசன் மனம் பதறினன். செய்வதொன்றும் அறியாமல் அரற்றினன். மந்திரிகள், பிரதானிகள் ஓடோடியும் வந்து கூடினர். திருமணக் காரியத்தை நிறுத்தி அவளுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தார்கள்.

பல மாந்திரிகர்கள், வைத்தியர்கள் முயன்றும், அரசகுமாரியின் மேல் பரவி இருந்த விஷம் இறங்கவில்லை. அரசன் மிகவும் கவலையுற்ருன். தூதுவர்கள் பறை சாற்றிக் கொண்டு வரும்போது

ஆதிநாராயணர் அடைபட்டிருக்கும் வீட்டு வாசலில் நின்று, "அரசகுமாரியைப் பாம்பு தீண்டிவிட்டது. விஷம் இறக்குவோருக்கு அரசா தம் குமாரியைத் திருமணம் செய்து கொடுத்து, முடியும் சூட்டி வைப்பார்" என்று கூவினார்கள். ஆதிநாராயணர் ஆசாரியின் மனைவி மூலம் தமக்கு மாந்திரிகம் தெரியும் என்று அங்கே கூடி இருக்கும் அதிகாரிகளுக்கு அறிவிக்கச் செய்தார். அதிகாரிகள் அவ்வுரையைக் கேட்டதும், ஆசாரியின் வீட்டினுள் புகுந்து, ஆதிநாராயணரைக் கண்டு, அவரை வெளியே விடுவித்தனர். ஒருவனைக் காரணமின்றி அடைத்து வைத்த காரணத்திற்காகச் சட்டப்படி ஆசாரியைக் கைது செய்து, சிறைச் சாலைக்குக் கொண்டு போனார்கள்.

ஆதிநாராயணர் அரச சபைக்குச் சென்றார். கொஞ்சம் வேப்பிலையும் பாலும் கொண்டு வரச்செய்து மாந்திரிகனைப் போல் அரசகுமாரியின் மேல் பரவியிருந்த விஷத்தை இறக்கத் தலைப்பட்டார். சிறிது நேரம் சென்றதும் நாகப்பாம்பு விரைந்து வந்து தான் தீண்டின இடத்திலிருந்து விஷத்தை எடுத்துக் கொண்டது. அரசகுமாரியும் துயில் நீங்கினவள் போல் எழுந்து அரசன் பக்கத்தில் அமர்ந்தாள். அரசன் கவலை நீங்கித் தன் மகளை வாரியணைத்து, உச்சி மோந்து சந்தோஷப்பட்டான்.

அரசன் தன் மகளுக்கு உயிரை அளித்தவரை அழைத்துப் பல பரிசில்கள் கொடுத்து உபசரித்தான். மேலும் அவர் வரலாற்றை அறிந்துகொண்ட வேந்தன், சிறையில் அடைத்திருந்த ஆசாரியை வரவழைத்து உண்மை அறிந்து, அவனை நாடு கடத்தினான்.

அரசன் வேண்டுகோளுக்கிணங்கி அரச குமாரியை ஆதிநாராயணர் ஒரு நல்ல நாளில் திருமணம் செய்துகொண்டார். குடிஜனங்கள் முன்னிலையில் அரசன் அவருக்கு முடி சூட்டி வைத்தான்.

அரசனும் அரசகுமாரியும், ஆதிநாராயணர் வரலாறு முழுவதும் அறிந்துகொண்டு, அவருடைய பூர்விக ஊரான சுசீந்திரத்திற்குத் தூதுவர்களை அனுப்பி, அங்குள்ள அவருடைய முதல் மனைவி, குழந்தை முதலியோர்களை வரவழைத்தார்கள். ஆதிநாராயணர் தம் இரு மனைவியர்களுடனும் குழந்தையுடனும், நீண்ட காலம் சுகமாக வாழ்ந்து வந்தார்.

கேட்டீர்களா!

புது நாணயங்கள்

நாணயங்களை ஆசைக்காகச் சேகரித்து வருபவர்களுக்கு அசோக ஸ்தூப முத்திரையுள்ள நாணயங்கள் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப் புதுரக நாணயங்களை வரிசையாக அட்டைப் பெட்டிகளில் அடுக்கி அவை வெளியே தெரியும்படி ஸெலபோன் காகிதத்தால் ஒட்டியிருக்கிறார்கள். ஏழு நாணயங்கள் கொண்ட இந்த அடுக்கு ஒன்றின் விலை ஐந்து ரூபாய். பம்பாய், கல்கத்தா நாணயச் சாலைகளிலிருந்து பணம் அனுப்பியோ வி. பி. பி. மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

ஆதாரக் கல்வி

"குழந்தைகளின் ஆரம்பக் கல்வியில் எலிமெண்டரி சயன்ஸ் அதாவது பதார்த்த ஞானமே முக்கியமான அம்சமாக இருக்க வேண்டும். இதுவே மகாத்மா காந்தியின் ஆதாரக் கல்வி முறையின் அடிப்படையான தத்துவம்" என்று நம் ராஜாஜி புத்தகாலய மகாநாட்டுக்கு அனுப்பிய செய்தியில் கூறியிருக்கிறார்.

புத்தகாலய மகாநாடு

ராஜாஜி மண்டபத்தில் தமிழ் நாடு புத்தகாலய மகாநாடு டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி நடைபெற்றது. டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் தலைமை வகித்தார். புத்தகக் கண் காட்சியை இந்திய சர்க்கார் ரெயில்வே மந்திரி திறந்து வைத்தார். ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் புத்தகாலயங்கள் ஏற்படுத்த வேண்டுமென்பதை இந்த மகாநாட்டில் அனைவரும் வற்புறுத்திப் பேசினார்கள்.

புதிய கனிப் பொருள்

இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத புதிய கனிப் பொருள் ஒன்றை அமெரிக்காவில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்தக் கனிப் பொருளை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானி ராபின்ஸன் என்பவரைக் கௌரவிக்கும் பொருட்டு இதற்கு 'ராபின்ஸனைட்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

காவிரிப் பாலம்

திருச்சி ஜில்லா எல்லையில் உள்ள புகளூரையும் சேலம் ஜில்லா எல்லையில் உள்ள வேலூரையும் இணைக்கும்படி காவிரி நதிக்கு ஒரு புதிய பாலம் ஒன்று கட்டியிருக்கிறார்கள். இதைக் கட்டி முடிக்க 30 லக்ஷரூபாய் செலவு ஆகியிருக்கிறது. ராஜாஜி இந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார். அடுத்த 5 வருஷங்களில் 10 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை ராஜ்யத்தில் மட்டும் இன்னும் 32 பாலங்கள் கட்டப் போகிறார்களாம்.

"கிருஷி பண்டிட்"

ஏக்கருக்கு 12 ஆயிரம் பவுண்டு நெல் விளைவித்ததற்காக, சேலம் ஜில்லா வெள்ளைய கவுண்டருக்குக் 'கிருஷி பண்டிட்' என்ற பட்டத்தையும் ஆயிரம் ரூபாய்ப் பரிசையும் பண்டித நேரு வழங்கினார்.

கண்ணன் தபால்

(டைம்பீஸ் பரிசுபெற்ற சிறுவன்)

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு சேலம் M. N. கோவிந்தராஜன் எழுதியது. நமஸ்காரம். நேற்று தங்கள் கடிதம் கிடைத்தது. கடிதம் வரும்போது நான் பள்ளிக்குச் சென்றிருந்தேன். அக்கம் பக்கம் வீட்டிலெல்லாம் விஷயம் தெரிந்து என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். நான் வீட்டுக்கு வந்து தங்கள் கடிதம் பார்த்ததும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா? எழுதினால் புரியாது. அப்படிச் சந்தோஷப்பட்டேன். இன்று காலை தங்கள் கடிதத்துடன் முன்னதாகவே பள்ளிக்குச் சென்று என் வகுப்பு ஆசிரியரிடமும் தலைமை ஆசிரியரிடமும் காண் பித்தேன். அவர்களும் சந்தோஷப்பட்டார்கள். அப்போதே பிரார்த் தனை (Prayer) ஹாலில் எல்லாப் பள்ளிக்கூட மாணவர்களிடமும் தலைமை ஆசிரியர் என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசினார். அப்போது, தங்கள் கடிதத்தைப் பார்த்த சந்தோஷத்தைவிட அதிகச் சந்தோஷப் பட்டேன். தங்களுக்கும் தங்களைச் சார்ந்த யாவருக்கும் என் நமஸ் காரங்கள். தங்கள் கடிதத்தில் எழுதியபடி படிப்பிலும் கவனம் செலுத்துவேன். நீங்கள் அனுப்பிய டைம்பீஸ் கடிகாரத்துடன் எடுத்த என்னுடைய போட்டோவை அனுப்பியிருக்கிறேன்.

இங்ஙனம், எம். என். கோவிந்தராஜன்.

• • • • •

பொழுது போக்கு விடை

மே. கீ: 1. கடிகாரம்; 2. படம்; 3. மணி; 5. அரம்; 7. தாமரை; 8. பாய்; 9. புத்தகம்; 11 எருமை.

இ. வ: 1. கப்பல்; 2. கை; 5. அணில்; 6. காகம்; 8. பாம்பு; 10. நாய்; 12. முதலை; 13. செருப்பு; 14. பை; 15. ஆமை; 16. அம்மி.

புது வருஷச் செய்தி

1	3	5	8	2	4	7	9	6	1	8	3	7	1	9	2
இ	ப	உ	வி	ந	யா	வா	ஏ	உ	ந்	ரு	ரீ	த்	த	ழை	ண்
6	8	9	4	1	2	3	8	5	2	1	6	8	6	3	1
ல்	ந்	க்	ரை	மா	ப	ட்	து	ற	ர்	த	லா	ச்	ச	சை	ம்
5	1	3	2	6	4	7	8	9	1	6	2	5	4	1	3
வி	கொ	க்	உ	ப்	யு	தி	சா	கு	ஞ்	பி	த	ன	ம்	ச	கு
2	6	1	5	3	7	6	2	5	4	9	3	6	1	7	2
வி	ர	ம்	ர்	ந	யா	யா	ரி	க	ம	உ	ல்	ண	சோ	ர்	டை
8	7	4	2	9	6	1	5	8	4	9	6	8	3	5	6
சா	கோ	தி	க்	த	ம்	த	ள்	ப்	த்	வி	ஏ	பா	ரு	வ	ற்
5	8	7	1	4	3	6	9	7	1	8	2	9	4	8	5
ர	டு	பி	ன	து	க	ப	செ	க்	த	கி	கு	ய்	ந	டை	லா
6	3	8	2	7	5	1	8	4	3	7	1	8	6	7	3
டு	ப்	க்	ம்	க	ம்	ரு	கு	ட	ப	லா	ம்	ம்	ம்	ம்	டி

நீ பிறந்த தேதிப்படி புது வருஷச் செய்தி என்ன தெரியுமா? உன்னுடைய பிறந்த தேதியை எடுத்துக்கொள். அதிலுள்ள இலக்கங்களை எல்லாம் கூட்டி ஒரே எண் மட்டும் வரும்படி செய்துகொள். இன்றைத் தேதியையும் அதேபோலக் கூட்டி ஒரே எண்ணைச் செய்துகொள். இரண்டு எண்களையும் கூட்டி ஒவ்வொரு வரிசையிலும் இருக்கும் எழுத்துக்களைத் தனியாக எடுத்து எழுதினால் செய்தி கிடைத்துவிடும்.

உதாரணம்: ஜயாவின் பிறந்த தேதி 18-8-1934. இப்பொழுது $1+8+8+1+9+3+4=34$. இன்றைத் தேதி 1-1-1952. இதையும் முன்மாதிரி கூட்டினால் 17 வரும். $34+17=51$. மறுபடியும் கூட்டினால் $5+1=6$ ஆகும். ஒவ்வொரு வரிசையிலும் 6-இல் உள்ள எழுத்தை எடுத்தால் 'உல்லாசப் பிரயாணம் ஏற்படும்' என்ற செய்தி கிடைக்கும். இதுதான் ஜயாவுக்குப் புது வருஷச் செய்தி!

—யோகம்.

* * * * *

சித்திர க்விஸ் விடை

1. திருச்சி மலைக்கோட்டை.
2. சகுந்தலையும் மானும்.
3. ஸீல்.
4. ராடார் விமானம்.
5. ரிப்பன் கட்டிடம்.
6. ஹிப்போ பொடமஸ்.
7. மகாபலிபுரச் சிற்பங்கள்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.